1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Telegrams: "CATHOLIC PRESS", JAFFNA.
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்கரவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 30-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 38-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

இரவிலே காற்று உரமாகவீசுகின்றது. பகலிலே வெயில் அகோரமாக எறிக்கின்றது. சிறுக மழைக்கோலம் காணப்படுகின்றது.

### பிரதமரின் யாழ்ப்பாண விஜயம்

சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் பிரதமர்பதவியேற்றபின் அதிகாரபூர்வமாக முதன்முறையாய் நேற்றுப் புதன்கிழமை காலை 8-30 மணிக்கு விஜயஞ்செய்தபோது, அரசாங்கதலைவர்என்றமட்டிலே யாழ்ப்பாணமக்கள் அவரைப்பெரிதும் ஆடம்பரமாக வரவேற்று உபசரித்துநின்றார்கள். யாழ்ப்பாணப் புகையிரதஸ்தானத்திலே ஒருவர்நீங்கலாக வடமாகாணப் பிரதிநிதிகள் அனைவரும், பெருந்திரளான பிரபலஸ்தர்களும், பெண்மணிகளும் சமுகமளித்திருந்தார்கள். முந்த யாழ்ப்பாண மேயர் முன்சென்று நகர்வாசிகள்சார்பாக அவரைவரவேற்றார். அதன்மேல் வரவேற்புச்சபையின் தலைவரான திரு. எம். ஸ்ரீ கந்தாஅவர்கள் அவருக்கு மாலைசூட்டினார். பின்னர் அங்கிருந்து நகரமண்டபம் வரையிலே கலாசாலைகள், கல்லூரிகளைச்சேர்ந்த மாணவர், மாணவிகளும், பிறரும் வீதியின் இருமருங்கும் வரிசையாகநிற்க, மாலைக்குமேல் மாலைசூடி யாவருக்கும் வந்தனம் தெரிவித்தபடியே நகரமண்டபத்தைஅடைந்து நகர்வாசிகளின் வரவேற்பைப்பெற்றனர். பிற்பகல் நீண்ட ஊர்வலத்தின்பின் பிரதமர் தீபாலங்காரஞ்செய்து சிங்காரிக்கப்பெற்றிருந்த நகரமண்டப மைதானத்தை அடையவே, சமுத்திரம்போல மக்கள் தேங்கியிருக்கப் பொதுவரவேற்பு சம்பிரமமாக நடந்தேறியது.

### வாழ்க்கைச்செலவுப்புள்ளி

இந்தப்புரட்டாசிமாதத்திலே வாழ்க்கைச்செலவுப் புள்ளித்தொகை 100·5 எனக் கணிக்கப்பட்டிருக்கிறது. இது முந்தியமாதத்திலும் சற்றேகூடியதாகும். அதற்குக்காரணம், எலுமிச்சம்பழம், உருளைக்கிழங்கு, மீன், கருவாடு ஆகியவற்றின் விலையேற்றமாகும்.

### எட்டு விடுமுறைநாட்கள்

இலங்கையிலே வர்த்தக ஸ்தாபனங்களில் கடமைபார்த்துவருகின்ற பணியாளர்களுக்கு இதற்குமுன் பகிரங்க விடுமுறைநாட்கள் கொடுபடவில்லை. தற்போது அவர்களுக்கும் வருடத்திலே எட்டுப் பகிரங்கவிடுமுறைநாட்கள் அளிக்கத் தொழில்மந்திரியாரான டக்றர் எம். சீ. எம். கலீல்அவர்கள் தீர்மானித்திருக்கின்றார். அவ்வாறு அளிக்கத் தீர்மானமாயிருக்கும் விடுமுறைநாட்களாவன: கிறீஸ்தவ புதுவருடம், சிங்களப்புதுவருடம், தமிழ்ப்புதுவருடம், சுதந்திரப் பெருநாள், வெசாக்பெருநாள், ரம்சான்பெருநாள், ஹஜ்ஜுப்பெருநாள், கிறிஸ்மஸ்திருநாள்என்பனவே. இந்தஎட்டுத்தினங்களிலும் சகலவர்த்தக ஸ்தாபனங்களும் மூடப்பட்டிருக்குமென்றும், எட்டுத்தினங்களுக்கும் பணியாளருக்குச் சம்பளம் கொடுக்கப்படுமென்றும் மந்திரியார் தெரிவித்திருக்கின்றார்.

### தேயிலை வரியேற்றம்

அரசாங்கம் தேயிலை ஏற்றுமதிவரியை றாத்தல் 60 சதத்திலிருந்து 75 சதமாக உயர்த்திவிட்டிருக்கிறது. இந்தவரியேற்றம் சென்றவியாழக்கிழமை நடுச்சாமமுதல் நடைமுறைக்கு வரலாயிற்று. இந்த வரியேற்றத்தால் அரசாங்கத்தின்வருமானம் வருடம்ஒன்றுக்கு ஐந்துகோடி ரூபாவால் அதிகரிக்கவிருக்கிறது.

### பொலிஸ்நாய் காட்டிக்கொடுத்தது

தங்காலையைச் சேர்ந்த முல்கிரியாகலையிலே ஓர்செல்வந்தரும், பதினாறு பிள்ளைகளுக்குத் தந்தையுமான பஞ்சிகிலேஜ் டையோனிஸ்என்பவர் சென்ற திங்கட்கிழமை அங்கு ஓர்தெருவிலே துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இறந்துகிடக்கக்காணப்பட்டார். இது செய்தி அறியவந்ததும் பொலிசார் அங்கு விரைந்துசென்று முல்கிரியாகலைக் கிராமவிதானையின்மகனையும், பி. டேவிட்எனும் மற்றொருவனையும் கைதுசெய்துள்ளனர். பின்னர் இந்தக்கொலை சம்பந்தமாகப் பிரயோகிக்கப்பட்ட துப்பாக்கியைச் சுவடுபிடித்துக் கண்டறியப் பொலிசருக்குத் துணைசெய்யும்படியாய்ப் பொலிஸ்பயிற்சிப் பாடசாலையைச்சேர்ந்த ரூவர்என்ற பொலிஸ்நாய் அங்குகொண்டுபோகப்பட்டது. அது இக்கொலைசம்பந்தமாய்க் கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவனதுவீட்டினூடாகப் பொலிஸ்கோஷ்டியை அழைத்துச்சென்று ஓர்கிணற்றண்டை போய் நின்றுகொண்டது. அதனால் அந்தத்துப்பாக்கி அக்கிணற்றினுள் எறியப்பட்டிருக்க வேண்டுமென நம்பப்பட்டு, அதைக் கண்டெடுப்பதற்காகக் கிணற்றுத்தண்ணீர் இறைக்கப்பட்டு வருகிறது.

### டீசல் எஞ்ஜின்கள்

யாழ்ப்பாணம், தலைமன்னார், கண்டி, காலிப் புகைவண்டித்தொடர்களை இழுப்பதற்கென்று டீசல்எஞ்ஜின்களை புகையிரதப்பகுதி உபயோகிக்கவிருக்கின்றது. அதனால் நீண்டதூரப் புகையிரதப்பிரயாணம் தீவிரகெதியில்நடைபெறவிருக்கின்றது. அதாவது தற்போதிலும் குறைந்தநேரத்தில் நடந்தேறவிருக்கிறது. உதாரணமாகக் கொழும்பிலிருந்து பதுளைக்குநடைபெறும் புகையிரதப்பிரயாணநேரம் ஒன்றரை மணித்தியாலத்தால் குறைந்துவிடும்.

### பாப்பரசரின் சுகநிலை

பரிசுத்தபாப்பரசர் சென்றஞாயிற்றுக்கிழமைஇரவு நன்குதுயில்செய்தாரென்றும், மறுநாளாகிய இன்று தினம்அதிகாலை காஸ்தெல் காண்டல்போவிலுள்ள தமதுகோடைகாலவாசஸ்தலத்திலே தம்முடையசயனசாலையின் பக்கமாக அமைந்துள்ள பிரத்தியேகசிற்றாலயத்தில் திவ்விய பூசை நிறைவேற்றினாரென்றும், கடந்த சிலதினங்களாக அவரைவருத்திய விக்கல்நோய் தற்போது குணமாகிவிட்டதென்றும் சென்றதிங்கட்கிழமை ரோமைக்கு[illegible]ராம் எட்டியிருக்கிறது.

### ஏழைகளின் பரோபகாரி

வடமத்தியமாகாணத்திலுள்ள நச்சடுவாக்குளக் குடியேற்றதிட்டத்திலே திரு. எல். ஏ. பெறேறாஎனும் முதலாளி வறியகுடும்பங்களுக்கெனத் தனதுசெலவிலே 13 குடிசைகள் அமைத்து, அங்கு தாம்பெற்றுக்கொண்ட 40 ஏக்கர் நெல்வயல்களையும் அவர்களுக்குப் பகிர்ந்துகொடுத்திருக்கின்றார். சமீபத்திலே பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவலஅவர்கள் அங்கு விஜயஞ்செய்தபோது, அப்பதின்மூன்றுகுடிசைகளினதும் திறவுகோல்களையும், அவற்றின் உறுதிகளையும், அவற்றுடன் பெறேறாமுதலாளி சம்மானித்த நாற்பதுஏக்கர் நெல்வயல்களையும் பதின்மூன்று குடும்பங்களிடமும் கையளிக்கலாயினர். அதன்மேல் பிரதமர் தமக்குஅணியப்பெற்ற மாலைகளுள்ஒன்றை அவருக்குச்சூட்டி, அவரதுசம்மானத்தை பாராட்டினர். இந்தப்பரோபகாரி ஓர்பிரமச்சாரி. வறிய கிராமவாசிகளுக்குத் துணைசெய்வதே இவரின்பேராவலாகும். பதின்மூன்று வீடுகளுக்கும், வயல்களுக்குமாக இவருக்கு 65,000ரூபா செலவுபிடித்திருக்கிறது. இவரைப்போலும் இன்னும் அநேக பெறேறாமுதலாளிகள் இலங்கையில் தோன்றினாலோ!

### சங்கீதவிழா

வருடந்தோறும் வழமைபோலநடந்தேறும் தென்மராட்சி – பச்சிலைப்பள்ளிச் சங்கீதவிழா சென்ற 25-ந் திகதி சனிவாரம் பிற்பகல் 6-30 மணியளவில் சாவகச்சேரி டிறீபேர்க் கல்லூரிமண்டபத்தில் உதவிவித்தியாதிகாரி திரு. ஆர். அந்தோனிப்பிள்ளை அவர்கள்தலைமையில் நடந்தேறியது. இருபதுக்குமேற்பட்டபாடசாலைகள் அதிலே கலந்துகொண்டன. பாட்டுப்போட்டியில் மந்துவில் கத்தோலிக்கபாடசாலை முதலிடம்பெற்றதையிட்டு மிகவும் சந்தோஷங்கொள்ளுகின்றோம். —நிருபர்

### அரிசிப்பங்கீட்டுப் புத்தகங்கள்

பதினைந்தாவது அரிசிக்கூப்பன் புத்தகங்களை வழங்குதற்காயத்தமாய்க் குடும்பத்தினரின்பெயர்களைப் பதிவு செய்யும்பத்திரங்கள் உணவுக்கட்டுப்பாட்டுப் பகுதியால் சென்றசனிக்கிழமைமுதல் உதவப்பட்டுவருகின்றன. ஏற்கனவே அச்சேற்றப்பட்டுள்ள புதிய பங்கீட்டுப் புத்தகங்கள் வருகிறமார்கழி மாதம் கொடுபடத்தயாராயிருக்கும். பதினைந்தாவது பங்கீட்டுப்புத்தகங்கள் 72 கூப்பன்களைக் கொண்டிருக்கும்.

### கண்டி உபதேர்தல்

பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையிலே காலியாயிருக்கும் கண்டிநகர்த்தொகுதி ஸ்தானத்துக்கு இருவரே அபேட்சகராகமுன்வந்து சென்ற 27-ந் திகதி திங்கட்கிழமை கண்டிக்கச்சேரியிலே தங்கள்நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பித்திருக்கின்றனர். இவர்களிலே கண்டியில் ஓர்நியாயவாதியான திரு. பிறெட் டி சில்வா அவர்கள் ஐக்கியதேசியக்கட்சி அபேட்சகராவர். கண்டியின் முன்னாள் காரியாதிகாரியும், சட்டக்கல்விபயிலும் ஓர் மாணவருமான திரு. பியசேன தென்னக்கூன் அவர்கள் எதிர்க்கட்சிகளின் அபேட்சகராவர்.

### கலியாணவிருந்தில் கத்திக்குத்து

டொண்டுவாவைச்சேர்ந்த றெலாம்பேஎனும் கிராமத்தில் சென்றவியாழக்கிழமைமத்தியானம் ஓர்மணவாளன், மணவாளியுடன் கலியாணவிருந்து ஒன்று நடந்துகொண்டிருந்தபோது திடீரெனஒருவன் கத்திஒன்றையும் விரித்துக்கொண்டு விருந்தினர்சாலையுள் நுழைந்து சிலரைக் குத்தத்தொடங்கியதும் விருந்தாடிகளெல்லாம் பயப்பிராந்திகொண்டவர்களாய்த் தெறிகெட்டோடத்தொடங்கினார்கள். மணவாளன்உட்பட நால்வர் காயமடைந்தார்கள். கே. ஆர்விஸ் என்றமணவாளன் தனதுமணவாளியுடனும், இனசனருடனும் விருந்துண்ண அமர்ந்தது ஹின்னிமகாத்மயாஎன்பவன் திடீரென அங்குசென்று விருந்துமேசையில் அமர்ந்திருந்த தனதுசகோதரர் இருவரையும் குத்தினான். அப்போது மாப்பிள்ளை விலக்குப்பிடிக்கச் சென்றவிடத்து அவரும்குத்துண்டு காயமடைந்தார். அவ்வாறே குத்தியவரின் சகோதரியும் காயமடைந்தாள். விருந்தாடிகள் பயப்பிராந்திகொண்டு அங்குமிங்குமாக ஓட்டமெடுக்க, சிலர் குற்றியஆசாமியைப்பிடிக்கத் தாந்து சென்றனர். ஆனால், அவன் காற்றாய்ப் பறந்து தப்பிக்கொண்டானெனினும் பிந்தப்பொலிசாரால் கைதுசெய்யப்பட்டான்.

### வெலிகாமத் தேர்தல்மனு

போக்குவரத்துமந்திரியாரும், சனப்பிரதிநிதிகள்சபையிலே வெலிகாமப் பிரதிநிதியாய் இருந்துவருகிறவருமான திரு. மொண்டேகு ஜயவிக்கிரம அவர்களின் தேர்தலைஆட்சேபித்து அப்பெவத்தையைச் சேர்ந்த திரு. விஜயதாச செனெவிரத்தினஎன்பவர் சுப்பிறீங்கோட்டுக்குச் சமர்ப்பித்த மனுவைச் சங். சான்சொனிநீதியரசர் விசாரணைசெய்து 5,000 ரூபா செலவுதொகையுடன் தள்ளிவிட்டிருக்கின்றார். இந்தத்தீர்ப்புச் சென்றதிங்கட்கிழமை கூறப்படலாயிற்று.

### கட்டுமரம் பிடிக்கப்பட்டது

ஊர்காவற்றுறை ரேகைச்சேர்ந்த சுங்கமாருதம்எனும் மோட்டர்வள்ளம் சென்றவியாழக்கிழமை காவல்செய்து கடலிலே சுற்றிக்கொண்டிருந்தபோது துணிவகைகள், பவுண்டன்பேனைகள், சவர அலகுகள், தென்னம்பிள்ளைகள் ஆதியவற்றைக் கள்ளத்தனமாக இந்தியாவுக்குக் கடத்திச்சென்ற ஓர்கட்டுமரத்தை வழிமறித்துப் பரிசோதனை செய்தபோது, அதிலே மொத்தமாக முப்பது மூடைகள்இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. துணிவகைகள்மாத்திரம் இருபதினாயிரம்ரூபா பெறுமதியுடையனவாம்.

### கவிமணி காலமானர்

தமிழ்ப்பெரும்புலவராக விளங்கியிருந்த கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை அவர்கள் தமது 79-வது வயதிலே தென்னிந்தியாவில் நாகர்கோவிலுக்குச்சமீபமாயுள்ள தையூரில் சென்ற 26-ந் திகதி ஞாயிறன்று காலமாயினரெனச் செய்திகிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! இங்கு வழமையாகக் காலமழைபெய்தால் நெல்விளைபுலங்களில் எருமைமக்கடாக்கள்,எருதுகள்கொண்டு உழுவாரின்ஓசைகள் ஆகாயந்தட்ட எழுந்துகொண்டிருக்கும். இரைச்சல் பேரிரைச்சலாயிருக்கும். ஆனால், சமீபத்தில்பெய்தபெருமழையின்பின் நெல்வயல்களை உழுகின்ற யந்திரங்களின் பேரிரைச்சலாலே பெரும்ஆரவாரமாயிருக்கிறது. இன்னும் இப்பகுதியில் ஆங்காங்குநடைபெறும கிராமியமக்களின் கூட்டங்கள், கொண்டாட்டங்களின் தடல்புடல்களுக்கும் குறைவில்லை. இவற்றிற்சில பொதுநன்மை பயப்பன போல் ஆரம்பமாகிப் பின்னர்ஒருசிலரின் தனிமதிப்பைபக்காட்ட ஏற்பட்டவைபோல் முடிவடைகின்றன. இருதோணிகளில் கால்மிதித்து எழுந்துநின்று புருடாவாக காட்டுத்தொண்டாற்றும் பெரியோர்களும இப்பகுதியில் இல்லாமலில்லையாம. நன்மை செய்வதுபோல நடித்து நாட்டினை இரண்டாகப் பிரித்துவைக்கும போலி நன்மக்களும் இங்குபொலிந்திருக்கின்றனராம். நாடு நல்லமாதிரியாக முன்னேறவேண்டுமானால் இவர்கள்விரைவிலே நடைகட்டவேண்டுமாம்.

**மாணவருட மடுவும்:** யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச்சேர்ந்த சகலகத்தோலிக்க பாடசாலைகளினதும மாணவர்மாணவிகளின் பெரியதிருயாத்திரை ம தமடுத்திருப்பதியில் இம்மாசம் 16-ந்திகதிதொடக்கம் 20-ந்திகதிவரை பக்தியருட்சியாக நடைபெறலாயிற்று. இந்தயாத்திரை மரியாயின்புனிதவருடசம்பந்தமாக நடத்தப்பட்டதாகும். யாத்திரிகர்களுக்குவேண்டிய சகல வசதிகளும் நல்லமுறையாகவும், நிறைவாகவும் செய்யப்பட்டிருந்தன. மகாவண. மேற்றிராசனபரிபாலன சுவாமியவர்கள்உட்படப் பலகுருப்பிரசாதிகள் சமுகந்தந்து யாத்திரிகர்களின் ஆன்ம, சரீர சௌகரியத்திற்கான சகலத்தையும் விமரிசையாக நிறைவேற்றினார்கள். 19-ந்திகதிமாலை திருமணித்தியால ஆராதனையின்பின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம பக்திப்பரவசமாக நடந்தேறியது. 20-ந்திகதியன்று காலைப் பூசையுடனும், பிரியாவிடை நிகழ்ச்சியுடனும் திருயாத்திரைவைபவம சம்பிரமமாக நிறைவாயிற்று.

**கலியாண காலம்:–** மக்கட்செறிவுகுறைந்த இப்பாகத்தில் எல்லா மாதங்களிலும் ஒரேவிதமாகக் கலியாணங்கள் நடைபெறுவதில்லை. ஆவணி, புரட்டாசிமாதங்களில்தான் பெருந்தொகையான கலியாணங்கள் நடைபெறுவது வழக்கம். ஆதலின் இக்காலமே கலியாணகாலமெனச் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. சென்ற23-ந்திகதியன்று ஒரேமுறையில் ஏழுதிருமணங்கள் உயிலங்குளக்கோவிலிலே கட்டளைக்குருவால் நிறைவேற்றிவைக்கப்படலாயின. அதுமுதல் திருமணங்கள் தொடர்ந்துநிகழ்ந்தபடியே இருக்கின்றனவாம்.

**தீச்செயல்கள்:–** இங்குள்ளசில கிராமங்களிலே அருவருப்புக்குரிய ஓர் தொற்றுநோய்பரந்து அநேகஆடவர்கள், பெண்மணிகளின் நல்வாழ்வுக்கு உலைவைத்துக் குடும்பவாழ்க்கையைப் பாழாக்கிவருகின்றது. அதுதான்பெண்கடத்துதலென்று எடுத்துச்சொல்லவும் மனங்கூசுகின்றது. இதனால்பலசந்தர்ப்பங்களில் நிகழும் பாதகச்செயல்களை அவதானிக்கும் நற்பண்புள்ளார் சகலரும மனத்துயருறுவது ஆச்சரியமன்று. இவ்விதம் பெண்களைஏமாற்றிப் பெருந்துரோகஞ்செய்யும் பேர்வழிகள்மட்டில் விழிப்பாயிருக்கவேண்டியது ஒவ்வொருவரையுமேபொறுத்த கடமையாகும்.

**ஞானஉபதேசக் காட்சி:–** மரியாயின்வருடமாகிய இப்புனிதவருடத்தை முன்னிட்டு அடுத்துவரும் ஐப்பசித்திங்கள் 7-ந்திகதிமுதல் மூந்தினங்களாக யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார்கல்லூரியிலே ஓர் பெரும் ஞானஉபதேசப் பொருட்காட்சி விமரிசையாகநடைபெற இருக்கின்றது. இது வெற்றிகரமாக நடந்தேறும்படியாகக் குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரீமார், ஆசிரியர், பாடசாலைப்பிள்ளைகள் மாத்திரமல்ல, ஏனையகத்தோலிக்கமக்களுமே இனிதுஒத்துழைக்கின்றார்களென அறிவது சந்தோஷமாகும். யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச்சேர்ந்த கத்தோலிக்கமக்கள் மாத்திரமல்ல, இலங்கைவாழ் சகல கத்தோலிக்கமக்களுமே கூட்டங்கூட்டமாகச்சென்று ஞானோபதேசப்பொருட் காட்சியைக் கண்குளிரக்கண்டு நன்மையடைவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

**தண்ணீர்ப் பஞ்சம்:–** வருடந்தோறும் இக்காலத்திலே மன்னார்ப்பட்டினத்தில் உண்டாகும் தண்ணீர்ப்பஞ்சம் இம்முறையும் தலைகாட்டியிருக்கின்றது. அதனால்நீர்க்குழாய்களைச் சூழவரக் குவிந்திருக்கும் பாத்திரங்களின் தொகையும், பெண்மணிகளிடையே உண்டாகும் தர்க்கவாதங்களும் சொல்லுந்தரமன்றும். அங்குள்ள மாடு, ஆடு, குதிரை, கழுதைகள் குடிக்கநீருக்கும், அருந்தப்புல்லுக்கும் அனுபவிக்கும் பரிதாபகரமானகாட்சியோ பகருந்தரமன்றும்.

## பொருட்காட்சி என்னும் அருட்காட்சி

...............: 'ஜெயம்' :...............

— 1 —

பொருட்காட்சி பொருட்காட்சி என்றால் ஈது
　　பொருள்காட்டிப் பொருளீட்டும் காட்சியல்ல
தெருக்காட்சி போல்வண்ணத் தீபந்தூக்கித்
　　திமிரூட்டும் சிறுகாட்சி அல்ல, அல்ல
அருட்காட்சி கலைக்காட்சி அழகுக்காட்சி
　　அகிலந்தான் கண்டறியா அறிவுக்காட்சி
திருக்காட்சி தனைப்பார்க்க வாரீர்! வாரீர்!!
　　திரள்திரளாய்த் திரண்டெழுந்து வாரீர்! வாரீர்!!

— 2 —

யாழூரின் திலதமென எழிலேயோங்கும்
　　சம்பத்தி ரிசியாரின் கல்லூரிக்கு
ஆளோடு ஆளாக அயலாரோடு
　　ஐப்பசியின் எட்டாம்நாள் அன்றேவாரீர்!
நாளோடு நாளாகக் கலைஞோர்நீற்று
　　நாம்காணத் தந்திலங்கும் கலைச்செல்வங்கள்
மீளாமுன் பெற்றிடுவோம் இன்பக்கொள்ளை
　　மேதகுநற் சோதரர்காள் வாரீர்! வாரீர்!!

— 3 —

சித்திரங்கள் என்றுசொன்னால் அதுபொய்யாகும்
　　சிற்பநிரை என்றிடினும் அதுவும்பொய்யே
வித்தகரின் கைத்திறனால் உயிரேபெற்று
　　விதவிதமாய் ஓவியங்கள் போன்றேதோன்றும்
எத்தனையோ காட்சிகளைக் காண்பீர்ஆங்கே
　　எல்லோரும் தான்மயங்கிப் போவீர்உண்மை
புத்தகங்கள் ஆயிரமாய்ப் புரட்டிப்பார்த்தும்
　　புத்தியிலே கண்டறியாப் புதையல்காண்பீர்

— 4 —

ஓவியங்கள் எத்தனையோ கதைகள்கூறும்
　　உத்தமநல் லறிவுரைகள் சிலைகள்பேசும்
ஆவிதனை மன்னுயிர்க்காய் அளித்தயேசு,
　　அன்னைமரி, சூசைமுனி அடியார்தங்கள்
சீவியங்கள் சரிதமெலாம் கண்ணுற்காண்பீர்
　　சிந்தையினுக் கோர்விருந்து ஞானக்கேணி
காவியங்கள் தந்தறியா இன்பம்தேக்கும்
　　கற்பனையார் காட்சியினைக் காண்போம்வாரீர்!

— 5 —

போதனைகள் பற்பலவே கேட்டோம்ஞானப்
　　புத்தகங்கள் எண்ணிலநாம் பார்த்தோம்பார்த்தோம்
வேதநெறி அணுவளவும் அறியாதந்தோ!
　　வீண்காலம் போக்கினமே இந்நாள்மட்டும்
ஓதுமுறை அத்தனையும் பொருள்மேலாக்கி
　　உள்ளொளியைத் தூண்டிவிடும் ஞானக்காட்சி
சாவதன்முன் கண்டுகளி கொண்டோம்என்பீர்
　　சத்தியமா மறைக்கூடம் காண்போம்வாரீர்!

● பார்சீகக்குடாவிலே டோஹா எனும் இடத்திற்கப்பால் கடலின் அடித்தளத்தில் எண்ணெய் இருப்பதாகக் கண்டறியப் பட்டிருக்கிறது. இந்த எண்ணெயை எடுப்பதற்கென எண்ணெய்க் கம்பெனிஒன்று 120 அடிநீளமும, 80அடி அகலமும், 60 அடி ஆழமுமுள்ள ஓர் உருக்குத்தீவை அமைத்துவருகின்றது.

● பிரித்தானியிலே குனட்என்ற பிரபலகப்பற்பிரயாணக் கம்பெனி 'சாக்ஸோனியா' என்ற மற்றோர்பாரிய உல்லாசப்பிரயாணக் கப்பலைக் கட்டிமுடித்திருக்கிறது. 925 பிரயாணிகளை ஏற்றிச்செல்லக்கூடிய இந்தக் கப்பல் 22,000தொன் நிறையுடையது. 608 அடிநீளமுடையது. இதிலே சாமான்களுக்கென மூன்றுலட்சம் கனஅடிகொண்ட இடமிருக்கிறது.

● தற்சமையம் உலகமுழுவதிலும் 23கோடி றேடியோசெற்றுகள் பாவனையிலிருந்துவருவதாகக் கண்டறியப் பட்டிருக்கிறது அதாவது, உலகிலுள்ள ஒவ்வோர் ஆயிரம்பேருக்கும் 95 றேடியோசெற்றுகள் இருக்கின்றனவாம். இந்தியாவிலே 1952-ம் ஆண்டு ஒவ்வோர் ஆயிரம்பேருக்கும் இரண்டு செற்றுகள்வீதமே யிருந்தன. தற்போது அவைகள்வெகுவாக அதிகரித்துள்ளன.

## பாப்பரசரின் உடல்நிலை

பரிசுத்த பாப்பரசர் கடந்த தைமாதம் நோயுற்றிருந்து பலநாட் சிகிச்சைக்குப்பிறகு குணமடைந்தார். அவருக்குக் கடந்தவாரத்தில் மீண்டும் சிற்சிலசமயங்களில் விக்கல் தொந்தரவு ஏற்பட்டிருந்தது. தைமாதத்தில் அவருக்குச சிகிச்சையளித்த சுவிற்சர்லாந்துதேச டக்றர்போல் நிக்கான்ஸ்அவர்கள் காஸ்தெல் காண்டல்போவுக்குச் சென்று ஊசியேற்றிவிட்டுப்போகிறார். புரட்டாசி 16-ந் திகதியன்று அவர்தமைக்காணவந்திருந்த பலதேசத்தவர்களின் பேட்டிகளில் பிரான்சிய, இத்தாலிய, ஜேர்மனிய, ஆங்கில, உலாந்த, ஸ்பானிய, போர்த்துக்கேய மொழிகளில் 30நிமிஷத்திற்குமேல் பேசினார். சாதாரணமாக இத்தகைய பேட்டிகளில் அவர் 50நிமிஷமே பேசுவது வழக்கம்.

றோமாபுரியில் சென்றவாரம் நடைபெற்ற சர்வதேச டக்றர்மாரின் மகாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகளுக்குப் 17-ந் திகதியன்று அவர் காஸ்தெல காண்டல்போவில் பேட்டியளிப்பதென்றும், அவ்வமயம் அவர் ஒரு சொற்பொழிவு ஆற்றுவதென்றும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், டக்றர்மார் இன்னும்சிலநாட்களுக்கு அவர் சொற்பொழிவு ஆற்றவேண்டாமென்று கேட்டுக்கொண்டதின்பேரில் அத்திட்டம் கைவிடப்பட்டது.

19-ந் திகதியன்று சுமார் 10,000 திருயாத்திரிகர்கள் அவரைப் பேட்டிகாணக் காஸ்தெல் காண்டல்போவுக்குச் சென்றார்கள். அவர் பேட்டியளிப்பதற்குச் சிலநிமிஷங்களின்முன் "பரிசுத்தபிதாவுக்குத் தற்காலிகமாக உடல்நலம் குன்றியுள்ளது; எனவே, அவர் சொற்பொழிவு நிகழ்த்தமுடியாது" என்று ஒலிபரப்பியிலே ஆறு பாஷைகளில் தெரிவிக்கப்பட்டது.

சிலநிமிஷங்களுக்குப்பின் அவர் திருயாத்திரிகர்கள் குழுமிநின்ற முற்றத்திற்கெதிரேயிருந்த மேல்மாடியில் தோன்றினார். வெள்ளைஅங்கி தரித்த ஒல்லியான அந்த உருவத்தைக்கண்டது வானைப்பிளக்கும் காகோஷம் எழும்பியது. அவர் அங்கு குழுமியிருந்தவர்களை அன்புடன் வரவேற்கும் வகையில் தமதுகரங்களை விரித்துப் புன்னகைபூத்துப் பத்துநிமிஷங்கள்வரை நின்றுகொண்டிருந்தபிறகு அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் அருளினார். அவர் உள்ளேபோனபிறகு திருயாத்திரிகர்கள் தத்தம்பாஷைகளில் 'பாப்பாண்டவர் வாழ்க!" என்ற கீதத்தைப் விடாது பாடிக்கொண் டிருந்தார்கள். அந்த முற்றத்தைவிட்டு அகல அவர்களுக்கு மனமில்லை. அதனால் பத்துநிமிஷங்களுக்குப்பிறகு அந்தமுற்றத்தின் மற்றோர் பக்கத்திலிருந்த கட்டடத்தின் மாடியிலிருந்த சன்னல்களுள் ஒன்று திறக்கப்பட்டது. பாப்பரசர் தமது நேசமக்களுக்கு மீண்டும்காட்சியளித்தார். சனக்கூட்டம் மீண்டும்காகோஷம்செய்யஆரம்பித்தது. சிலவினாடிகளுக்கு ஒருமுறை அவருக்கு இலேசான விக்கல் ஏற்பட்டதைச் சன்னலுக்கருகில் நின்றவர்கள் காணக்கூடியதாய் இருந்ததாம்.

பாப்பரசரின் சொந்த டக்றராகிய புறொபெசர் றிக்கார்தோ லிஸி அவர்கள் அவருக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள கோளாறு தைமாதத்தில் இருந்ததுபோல அவ்வளவு கடுமையானதல்லவென்றும், கடினஉழைப்பே இக்கோளாறு மீண்டும்தோன்றக் காரணமென்றும், போதியஓய்வும், தக்கசிகிச்சையுமிருந்தால் அவர் வெகுசீக்கிரம் குணமடைவாரென்றும் தெரிவித்துள்ளார்.

### நேர்த்தியின் பூர்த்தி

பரிசுத்தசகாயமாதா, என்சகோதரிக்காக நான்வேண்டிய குடும்பசமாதானத்தை அவளுக்குஅருளினா. அவ்வன்னையின் அருளினை மேன்மேலும் வேண்டுகிறேன்.

A. R. N.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்



### பாப்பரசரின் சுகநிலை

"பரிசுத்தபாப்பரசர் நோய் கொண்டவராய் இல்லை, ஆனல், களைகொண்டவராய் இருக்கின்ருர்" என்று அவரது சொந்த வைத்தியரான டக்றர் றிககார் தோலிஸி அவர்கள் சென்ற18-ந் திகதியன்று தெரிவித்திருக்கின்ருர். நீடியவாராந்த விடுமுறைக்காக றோமைநகரைவிட்டு வெளிகொள்ளவிருந்தஇவர் அங்குதங்கியிருந்து 78வயதுடையவரான பாப்பரசரின் சுகநிலையைக் கவனிக்கப்போவதாகத் தெரிவிக்கலாயினர். "பரிசுத்தபிதா தற்போதுநடத்திவரும் வாழ்க்கைமுறையாலே இளைத்துப்போயிருக்கின்ருர்; அவருடையநரம்புகள் தளர்ச்சியடையும் அறிகுறிகளையே தற்போதுகாண்பிக்கத் தொடங்குகின்றன" என அவர் கூறியிருக்கின்ருர். 18-ந் திகதியன்று தமதுநேரத்தில்மிகப்பெரும்பகுதியைப் படுக்கையிலேயே செலவிட்டு ஏறக்குறைய ஓய்வு எடுத்துக்கொண்டாரெனத் தெரியவருகிறது. ஆயிரக்கணககான மக்களுக்குப் பேட்டியளித்து, அநேக சொற்பொழிவுகள் நிகழ்த்திய களைப்புமிருந்த ஒரு வாரத்தின்பின் அடுத்தசில தினங்களில் தமது வேலைகளைக் கூடியமட்டுங் குறைத்துக்கொள்ளப் பாப்பரசர் இசைந்திருக்கிருரென அறிவிக்கப்படுகிறது.

### மாதாகேட்டருளிய கோவில்

பெல்ஜியதேச போறெயிங் எனும் கிராமத்திலே 1932-1933-ம் ஆண்டுகளின் மாரிகாலத்தில் நான்கு சிறுமிகளும், ஒருசிறுவனுமாக ஐந்துபிள்ளைகளுக்குத் தேவதாயார் மூப்பது முறைகளுக்குமேல் காட்சியளித்தபோது, தமக்குத்தோத்திரமாக அங்கு ஓர்கோவில் கட்டப்படவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அதன் பேரில் அங்குகட்டியெழுப்பப்பட்ட சிற்ருலயம் மூந்நினங்களாக நடந்தேறிய பக்தியருட்சிக்குரிய திருவைபவங்களுடன் நாமூர்நகரினசாருமேற்றிராணியாரால்சென்ற ஆவணிமாதஇறுதியிலே அபிஷேகஞ்செய்யப் படலாயிற்று. தற்போதுவளர்ந்து விவாகஞ் செய்து குடும்பஸ்தராயிருக்கும் அந்தஐந்துபிள்ளைகளும் அந்தருணம் சமூகமளித்திருந்தார்கள். அப்போது சமூகமாயிருந்த ஐயாயிரம் யாத்திரிகர்களில் போறெயிங் மாதாவின் சலுகையால் அற்புதமாகக் குணமடைந்த அநேகரும் அடங்கியிருந்தனர். காட்சியருளப்பெற்ற இத்தலத்துக்குச் சனங்கள் கூட்டங்கூட்டமாகச்சென்று தினமும் செபமாலை சொல்வது வழக்கமாகிவிட்டது.

### தொளாயிரம் புதியகோவில்கள்

கம்யூனிஸ்தஆட்சியில இருந்து வருகின்றபோலாந்தில்கொர்சோஎன்ற மேற்றிராசனமும் ஒன்று. இது அப்போஸ்தலிக்க பரிபாலனத்தில் இருந்துவருகிறது. இற்றைக்குப் பத்துவருடங்களின்முன் நூறுகோவில்களே இருந்துவந்த இம்மேற்றிராசனத்தில்தற்போது ஆயிரத்துக்குமேற்பட்ட கோவில்கள் இருக்கின்றன இந்தமேற்றிராசனம் இருந்துவரும்பகுதியில் முன்னர் புறெட்டஸ்தாந்த ஜேர்மனியரே மிகப்பெரும்பான்மையினராக வசித்திருந்தார்கள். ஆனல், இரண்டாவது உலகயுத்தம முடிவடைந்தபோது இந்த ஜேர்மனியரெல்லாம் அங்கிருந்து வெளியேற்றப்பட, அவர்களிடமாகப் போலிஷ் கத்தோலிக்கர் கொண்டுபோய்க் குடியேற்றப்பட்டுக் கைவிடப்பட்டிருந்த புறெட்டஸ்தாந்த கோவில்களைத் தமக்காக்கிக் கொண்டார்கள். சமயப் புரட்சியின்போது புறெட்டஸ்தாந்தரின் கைப்பட்டகொர்சோநகர கத்தோலிக்கஆசனக்கோவில் புதுப்பிக்கப்பெற்றுத் தற்போது அதில் திவ்வியபூசை நிறைவேறிவருகிறது.

### செபமாலைச் சினிமாப்படங்கள்

செபமாலைத் தேவஇரகசியங்களை ஆதாரமாகக்கொண்ட பதினைந்து அரைமணிநேரச் சினிமாப்படங்களைத் தயாரிக்கக் குடும்பசெபமாலைப் படையணியின் தளகர்த்தரான வண. பற்றிக் பெயிற்றன் சுவாமியார் திட்டஞ் செய்கின்ருர். இவைகள் கம்யூனிஸத்தை எதிர்த்துப் போராடுவதற்காக உலகின் நானபகுதிகளிலும் காண்பிக்கப்படும். இவைகள் ஒவ்வொன்றையும் தயாரிக்க 9,000 டவுண் செலவு பிடிக்கும். இவற்றிலே பன்னிருபடங்களைத் தயாரிப்பதற்கு வேண்டிய பணம் அமெரிக்க ஐக்கியதேசத்திலும், ஆஸ்திறேலியாவிலும் சேகரிக்கப்பட்டுவிட்டது. அவர்சமீபத்திலே அயர்லாந்தில் நடாத்திய செபமாலைப் படையணியின்போது இன்னும் அதிகபணம் கொடுப்பதாக உறுதிவாக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. முதற்படம் தயாரிக்கும்வேலை தேமமாதா மாசில்லாமல்உற்பவித்த திருநாளாகிய வருகிறமார்கழிமாதம் 8-ந்திகதி ஆரம்பமாகும்.

### மனந்திரும்பிய 5,000 சீனர்கள்

இந்து சமுத்திரத்திலுள்ள பிரித்தானிய குடியேற்றநாடாகிய மோரிஷஸ் தீவில் வசிக்கின்ற பதினயிரம் சீனர்களில் அரைவாசிப்பேருக்கு மேற்பட்டவர்கள் மரியாயின் சேனைமூலம் மனந்திரும்பிக் கத்தோலிக்கராகியிருக்கின்ருர்கள் இந்தத் தனிப்பட்ட தீவுக்கூட்டத்திலுள்ள அநேகவிசாரணைப்பங்குகளில் மரியாயின் சேனையார் ஞாயிறுவாரப் பாடசாலைகளும், சாயந்தரவகுப்புகளும் நடத்திவருகின்றனர். செபமாலை செபிப்பதற்கென்று இவர்கள் குடும்பங்களைக் கூட்டங்கூட்டமாக அணிவகுத்து நடத்தி மரியாயின் வருகைக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிருர்கள்.

### விசு. பரப். சபைக் காரியதரிசி

சென்றதைமாதமுதல் றோமாபுரியிலே விசுவாசப்பரப்புதற் சபைக் காரியதரிசியாய் இருந்துவந்தவரான பெர்நார்தின் அதிமேற்றிராணியார் தமது 70-ம் வயதிலே காலஞ்செல்லலாயினரெனச் செய்திகிடைத்திருக்கிறது. அமெரிக்க ஐக்கியதேச வாஷிங்ரன்நகர கத்தோலிக்க சர்வகலாசாலையிலே கனன் சட்டசாஸ்திர பேராசிரியராய் இருந்தபின் 1930-ம் ஆண்டு இவர் அந்நகரிலுள்ள அப்போஸ்தலிக்க ஸ்தானபதியத்தின் பிரதம காரியதரிசியானர். மூன்றுவருடங்களின் பின்னர் அதிமேற்றிராணியாராக அபிஷேகஞ்செய்யப்பெற்று, ஆஸ்திறேலியாவின் அப்போஸ்தலிக்க ஸ்தானபதியாயினர். பின்னர் அநேகவருடகாலம் சுவிற்சர்லாந்திலே பாப்பரசரின் ஸ்தானீகராகக் கடமைபார்த்துவந்தார். இவர் பதினெராம்பத்திநாத பாப்பானவரது ஆட்சிகாலத்திலே வத்திக்கான் இராச்சிய மந்திரியாராக விளங்கியிருந்த கருதினல் கஸ்பாறிஆண்டவரின் மருகராவர்.

### யுத்தத்திலே குற்றச்சாட்டு

ருஷியாவிலே கிறீஸ்துசமயத்தை அழித்துவிடுமாறு சோவியற்அரசு எவ்வளவோதூரம் முயன்றும் அதுவோ இன்னும் அழிவதாயில்லை. அதற்குப் பதில் அது மறுமலர்ச்சியடைந்து கொண்டு வருகிறது. சோவியற் எழுத்தாளரான பவியால்கின் என்பார் சமீபத்தில் நிகழ்த்திய வானெலிப்பேச்சில்: ருஷிய மக்களிடையே சமயநம்பிக்கையைப் பலப்படுத்திவிட்டதற்காக யுத்தத்தின்மேல் குற்றம்பாரித்திருக்கின்ருர். தங்கள் சொந்தக்கதியையும், தங்களதுநெருங்கியசுற்றத்தவர்களின் கதியையுமிட்டு யுத்தகாலத்தில் ருஷியமக்கள் பெரிதுங்கவலைகொண்டதே அதற்குக்காரணமென்று அவர் சாற்றுகின்ருர். "பிற்போக்குள்ளபெற்றோர்தங்கள்பிள்ளைகளுக்குக் கிறீஸ்துசமயத்தில் இன்றுமே ஞானஸ்நானம் கொடுப்பித்துக்கொண்டு வருகிருர்கள்; ஏனையவர்கள் தங்கள் விவாகபந்தனத்தைப்பலப்படுத்திக்கொள்ளும்படி கோவிலிலே தங்கள் விவாகம் நடைபெறவேண்டுமென நிற்கின்ருர்கள்; புதுமைகளில் நம்பிக்கையுள்ளவர்களும், நோயுண்டாகும்போது செபஞ்செய்யும்படி கோவிலுக்கு ஓடிப்போகிறவர்களும் இன்னுமே இருந்துவருகிருர்கள்; என்ருலும் சமயத்தின் வேர்கள் வேரோடுகளையப்பட்டு விட்டன வென்று இவர்கூறியிருக்கின்ருர்.

### குணமடைந்த மேற்றிராணியார்

சிசிலிதீவிலே சிருக்கியூஸ்நகர "கண்ணீர்சிந்திய மாதா"வின் முன்பாக இரந்துமன்ருடிய பின்னர் திராப்பிணியென்று டக்றர்மாரால் தீர்மானிக்கப்பட்ட நோய்ஒன்றிலிருந்து தாம் அற்புதமாகக் குணமடைந்ததாகக் கயபஞ்ஞாநகரின் பலாரக்கு மேற்றிராணியார் தெரிவித்திருக்கின்ருர். இந்தத் திராப்பிணி எட்டுமாதகாலமாகத் தமக்குக் கடூரவேதனையைத் தந்துகொண்டிருந்ததாகவும், அதனல் தாம்முற்ருக அசையமுடியாமல் இருந்ததாகவும்அவர் கூறுகின்ருர். மரியாயின் மாசில்லாத திருச்சுரூபம் அற்புதவிதமாகக கண்ணீர்சொரிந்த முதலாம்ஆண்டு நிறைவுஞாபகார்த்தமாகச் சிருக்கியூஸ் நகரிலே நான்குதினங்களாக நடந்தேறிய திருவைபவங்களின் போதும், சுற்றுப்பிரகாரத்தின்போதும் மேற்றிராணியார் தாம் அடைந்துகொண்ட அற்புத ஆரோக்கியத்தைப்பற்றிப் பேசலாயினர். சிருக்கியூஸ் நகர பரன்சினி அதிமேற்றிராணியார் கண்ணீர்சிந்திய அற்புதம் நிகழ்ந்த தொழிலாளியின் குடிசைக்குமேலாக அமைக்கப்பட்ட பிரத்தியேக செபக்கூடத்தை ஆசீர்வதித்தார். அங்கு ஓர்ஆலயத்தைக் கட்டுவதற்கென்று அநேக ஆபரணங்களும், பணமாக 50,000பவுண்வரையிலும் இதுவரை மாதாவின்பக்தர்களால் உடகரிக்கப்பட்டுள்ளன.

### கண்ணீர்சிந்திய மாதா

இத்தாலியின் தென்பாலுள்ள சிசிலிதீவைச் சேர்ந்த சிருக்கியூஸ்நகரிலே சனநெருக்கமான ஓர்சேரிச் சதுக்கத்தின் பக்கமாகஇருந்துவரும் வீடுஒன்றிலே சமீபத்தில் ஓர் ஞாயிற்றுக்கிழமை அந்நகர் அதிமேற்றிராணியாரான பரன்சினிஆண்டவர் திவ்வியபூசை நிறைவேற்றினர். இற்றைக்கு ஓர்ஆண்டின்முன் இந்தவீட்டில்தான் கர்ப்பவதியான ஓர்பெண்ணின் படுக்கைக்குமேலாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த மாதாவின் சுரூபம் ஒன்று அற்புதவிதமாகக் கண்ணீர்சிந்தி அழலாயிற்று. சிசிலிதீவின் மேற்றிராணிமார் இதனை நன்கு விசாரணைசெய்து கண்ணீர்த்துளிகள் உண்மையான மனிதகண்ணீர்த் துளிகளென்றும், அற்புதமாகவே அது நிகழ்ந்ததென்றும் பிரசித்தமாக அறிக்கையிட்டார்கள். திவ்வியபூசை நிறைவேறும்போது ஐம்பதினயிரம் மக்களுக்குமேல் அந்தச் சதுக்கத்தில் குழுமியிருந்தார்கள். அதிலே திவ்வியநன்மைபெற்றவர்களில், தனதுபடுக்கைக்கு மேலேயிருந்த சுரூபம் கண்ணீர்சிந்தி அழுது எட்டுமாதங்களின்பின் தான் பெற்றெடுத்த ஆண்குழந்தையுடன் அங்குசமூகமாயிருந்த அன்ரோனியா குயிஸ்ரோ என்பவளும் அடங்கியிருந்தாள். இந்த அற்புதசுரூபத்தை ஸ்தாபிப்பதற்கென்று கட்டியெழுப்பப்படவிருக்கும் திருசேத்திரத்துக்கு உலகம் முழுவதிலுமிருந்து 50,000 பவுணுக்குமேல் காணிக்கையாக அனுப்பப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புரட்டாசி மாதம்

போதுக்கருத்து:— கத்தோலிக்க சேவையிலே வாலிபர்கள் எண்ணிக்கையிலும், ஞானத்திலும் முன்னேறும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:— திருச்சபையின் சமூகதர்மக் கொள்கை வேதபோதகநாடுகளில் அதிகமாகப் பரவி நன்கு மதிக்கப்படுவதற்காக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 30-ந் திகதி

## செபமாலைப் பக்தி

மரியாயின் புனிதவருடத்திலே மரியாயின் செபமாலை மாதம் வருகின்றது விசுவாசிகளும், குடும்பங்களும், சனசமுதாயங்களும், திருச்சபைமுழுவதுமே தற்கால அபாயங்களுக்குத்தப்பித் தேவாசீர்வாதங்களை நிறைவாகப்பெற்று, இரட்சணியபெறுபேறை அடைந்துகொள்ளச் செபமாலைப்பக்தி ஓர்சித்திகரமான சாதனமாய் இருக்குமென்பதை நன்குணர்ந்த பதின்மூன்றாஞ்சிங்கராயபாப்பானவர் ஐப்பசிமாதத்தைச் செபமாலைப்பக்திக்கெனநேர்ந்து, அதை அனுசரிப்பாருக்கு விசேஷஞானப் பலன்களை அளித்துள்ளனர். அவருக்குமுன்னிருந்த பாப்புமாரும் செபமாலைப் பக்தியை மேலாகமதித்துவந்தார்கள் என்பதற்கு அவர்களின் வாக்குகளே போந்தசான்றாகும்.

"செபமாலை செபிப்பவர்களுக்கு அதுவிலைமதிக்கரிய நன்மைகளை விளைப்பதாயிருக்கின்றது" என்றார் ஊர்பான் என்னும் பாப்பானவர்.

"யேசுக்கிறீஸ்துநாதரையும், அவரதுமாதாவையும் ஒருங்கு மகிமைப்படுத்துகிற இச்செபமுறை கிறீஸ்துவேதத்தை அச்சுறுத்துகிற தீங்குகளைப் பலட்சயப்படுத்துவதில் சித்திகரமானது" என்றார் சிக்ஸ்துஸ் எனும் பாப்பானவர்.

"செபமாலைஎனும் உபாயத்தினாலே பிசாசு தோற்கடிக்கப்படுகிறது" என்றார் மூன்றாம்பவுல் எனும் பாப்பானவர்.

"செபமாலை பரிசுத்த றோமான் திருச்சபையின் ஆபரணம்" என்றார் மூன்றாம்யூலியஸ் எனும்பாப்பானவர்.

"சருவேசுரனுடைய கோபத்தை அமர்த்தவும், பரிசுத்தகன்னிமரியம்மாள் நமக்காகப்பரிந்து பேசும்படி இரந்துகொள்ளவும் செபமாலை ஏற்படுத்தப்பட்டது" என்றார் பதின்மூன்றாம் கிறகோரியார்எனும் பாப்பானவர்.

"செபமாலையானது பாவத்தை நிர்மூலமாக்குவதாயும், வரப்பிரசாதத்தைப் புதுப்பிப்பதாயும் தேவமகிமையை அதிகரிப்பிப்பதாயும் இருக்கின்றது" என்றார் பதினைன்காம் கிறகோரியார் எனும் பாப்பானவர்.

"செபமாலை வரப்பிரசாதங்களின் பொக்ஷம்" என்றார் ஐந்தாம்பவுல்எனும் பாப்பானவர்.

"செபமாலை கிறீஸ்துவேத விருத்திகருத் துணைசெய்கின்றது" என்றார் எட்டாம் ஊர்பான்எனும் பாப்பானவர்.

"உங்கள் இருதயங்களிலே, உங்கள் குடும்பங்களிலே, உங்கள்தேசத்திலே சமாதானத்தைக்கொண்டிருக்க விரும்பினால் ஒவ்வொருசாயங்காலமும் ஒன்றுகூடிச் செபமாலை ஓதுங்கள்" என்று ஒன்பதாம் பத்திநாதர் எனும் பாப்பானவர் கூறியிருக்கின்றார்.

இவ்வளவாக மதிக்கப்பட்ட செபமாலைப்பக்தியை நாமும் மேலாகமதித்துச் செபமாலையை நாடோறும் தவறாமல் ஓதிவருவோமாக. தேவதாயாரின் பக்தியுள்ள தாசர்கள்பாவனையாக நூற்றைம்பத்துமூன்று மணிச் செபத்தை அனுதினமுஞ்சொல்லிக்கொள்ளமுடியாவிடின் ஐம்பத்துமூன்றுமணிச் செபத்தையாவது சொல்லிவரப் பிரமாணிக்கமாயிருப்போமாக. செபமாலைஓதும்போது அந்தந்தக் காரணிக்கத்துக்குப் பின்வரும் பத்துமணிச் செபவேளையிலே அந்தந்தக் காரணிக்கத்தில் அடங்கிய தேவஇரகசியத்தைத் தியானித்துக்கொள்ளும்படி கவனமெடுப்போமாக.

## வண. ஈ. ஓலிவ் சுவாமியார்

மங்காச் சிறப்புற்றுத்திகழும் மருதமடுச் செபமாலைமாதா திருசேத்திரத்தின் பரிபாலனராய் நெடுங்காலம் விளங்கியிருந்த வண. ஒலிவ்சுவாமியவர்கள் மரணத்திரையில் மறைந்தாலும் அவரின்பெயரோ, புகழோ அத்திருப்பதியில் எக்காலுமே மங்கப்போவதுமில்லை. எந்நாளுமே மறையப் போதுமில்லை. ஆம், அப்பதியின் பிரபல்ய முன்னாள் பரிபாலனரான வண. ஒலிவ் எனும் உத்தமகுரவரும் இம்மாதம் 20-ந் திகதியன்று காலை இறைவன்திருவடி சேரலாயினாரெனச் செய்தி கிடைத்திருக்கிறது. சுவாமிகள் 1867-ம் ஆண்டு புரட்டாசிமாதம் பிறந்தாராதலின் மரிக்கும்போது அவருக்குவயது 87.

வண. எமில் ஒலிவ் சுவாமியார் பிரான்சிலே நான்ஸ்நகரைத் தமது ஜனனபதியாகக் கொண்டவர். 1894-ம் ஆண்டு ஆடிமாதம் 8-ந் திகதியன்று குருப்பட்டம் பெற்றாராகவே, இவ்வாண்டு ஆடிமாதம் 8-ந்திகதியன்று தமதுகுருத்துவ அறுபதாம்ஆண்டு வைரயூபிலியைக் கண்டுகளிக்குப்பாக்கியம் பெற்றார். இவர் 1894-ம்ஆண்டு மார்கழிமாதம் யாழ்ப்பாணம்வந்து சேர்ந்து பருத்தித்துறை, மாதோட்டம், இளவாலை, வவுனியா முதலாம்விசாரணைப்பங்குகளிலே பதின்மூன்றுவருடகாலம் திருத்தொண்டாற்றியபின் 1908-ம் ஆண்டு மருதமடுத் திருசேத்திர பரிபாலனராக நியமனஞ்செய்யப்பட்டார். அதுமுதல் சுவாமியவர்கள் அதன் பரிபாலனராயிருந்து செபமாலைமாதாவின் பக்தியைப் பரப்புவதற்கும், அத்திருப்பதியின் பிரஸ்தாபத்துக்குமாக ஆற்றியுள்ள மகத்தானபணிகளோ சாற்றுந்தரமன்று.

ஓர் வனவாசியைப் போன்று கானகத்தையே தமதுவாசஸ்தலமாக்கிகொண்டு, கானகத்திடையே காட்சியளிக்கும் செபமாலைநாயகியின் மகிமைக்காக உழைப்பதையே தமது பெருங்காதலாகக் கொண்டு, அங்கு வரும் திருயாத்திரிகர்களின் சுகசேமத்தையே தமதுசுகசேமமாகக்கொண்டு, ஓர் நல்ல பிதாவைப்போலக் கால்நூற்றாண்டுக்குமேற்பட அவர்களைக் கருத்தாக விசாரணைசெய்து, எல்லோரது பேரன்பையும் பெற்றுக்கொண்ட ஒலிவ் சுவாமிகளின்நாமம் மருதமடுத்திருப்பதி உள்ளகாலம்வரை மங்காதுஒளி பெற்றுத் துலங்கிக்கொண்டிருக்குமெனலாம்.

மடுப்பதியிலே மழையென்றும், வெயிலென்றும், பனியென்றும், குளிரென்றும்பாராது அத்துணைவருடகாலம் அயராதுழைத்துவந்த சுவாமியவர்கள் தள்ளாப்பிராயம் அடைந்தார். உடல்நலங் குன்றினார். சுகம்நோக்கித் தமதுசுயநாடு சென்றார். அங்கு மாதாகாட்சியளித்த பேரானதிருசேத்திரம் இருந்துவருகின்ற பொமென் நகர்சென்று அந்நகரிலே அமலோற்பவ மரியநாயகியின் பிரபலசின்னக்குருமடத்தில் வசித்துவந்தும் உடல்நலம்பெறாதவராய் அதிலேயே தமது அந்தியகாலத்தைச் செலவிட்டுவந்து அமலன்திருவடி சேரலாயினர். சுவாமியவர்களின் அந்தியகால வாழ்க்கையையும், அவரதுமரணத்தையும்பற்றி மறுமுறை எழுதுவோம்.

R. I. P.

## பாப்பரசரின் விசுவாசப் பரப்புதற் சபை

உலகத்தின் சகல சாதி சனங்களுக்கும் சுவிசேஷத்தைப் போதியுங்கள். —அர்ச். மத். XXVIII.

விசுவாசப் பரப்புதலுக்காக உலகத்தின் எத்திசையிலும் சுவிசேஷ தொண்டு புரியும் 70,000 மிஷனரிய மேற்றிராணிமார் குருமாருக்குச் செபஉதவி, பொருளுதவி செய்வதே இச்சபையின் நோக்கம். இச்சபைக்குத் தலைமை வகித்திருப்பவர் பரிசுத்த பாப்பரசர்தாமே.

**அங்கத்துவம் :**
சகல கத்தோலிக்கரும் இச்சபையில் சேரலாம். மரித்தோரையும் சேர்த்துவிடலாம். மரித்தவர்கள் அங்கத்தவராயிருப்பதற்குச் செபக் கடமையில்லை.

**சபையிற் சேருதல் :**
தங்கள் கட்டளைக் குருவானவரிடம் அல்லது அவரால் நியமனம் பெற்ற விருத்தியாளரிடம் தங்கள் பெயர்களைப் பதிவிப்பது சேர்க்கப்படுவோருக்கு அங்கத்துவ பத்திரம் வழங்கப்படும்.

**அங்கத்தவர்களின் கடமை :**

1. தினம் 1 பர. 1 பிரி. ஒருமுறை "அர்ச். பிரான்சீஸ்குச் சவேரியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்," "பாலகயேசுவின் சின்னத் தெரேசம்மாளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்,' எனச் செபித்தல்.
2. மாதம் 12½ சதம் விசுவாசப் பரப்புதல் வேலைக்காகத் தருமம்கொடுப்பது. வேறுகடமையில்லை.

**ஞானப்பலன்கள் :**

1. அங்கத்தவர்களுக்காக வருஷம் 20,000 திவ்விய பூசைகள் செய்யப்படும். மரித்த அங்கத்தவர்களுக்காகவும் 20,000 திவ்விய பூசைகள் செய்யப்படும்.
2. அங்கததவர்களுக்கு வருடம் ஒன்றுக்கு 70 பரிபூரண பலன்களும், எத்தனையோ சில்லறைப் பலன்களும் பாப்பரசர் அளித்திருக்கிறார்.

**விசுவாசப் பரப்புதலுக்காகச் செபம்**

சகல மனுஷரும் சத்தியத்தைக் கண்டுணர்ந்து இரட்சணியமடைய வேண்டுமென்று விரும்புகிற சர்வேசுராசுவாமி வேளாண்மைக்கு வேண்டிய வேலையாட்களை அனுப்பியருளும். உமது திருவேதத்தை உற்சாகத்தோடு போதிக்க அவர்களுக்குத் தைரியத்தை அளித்தருளும். சுவிசேஷத்தைச் சகலரும்கேட்டு ஸ்துதிக்கவும், ஏகமெய்யான கடவுளாகிய உம்மையும், உம்மால் அனுப்பப்பட்ட உமது தெய்வீகசுதனும், எங்கள் ஆண்டவருமாகிய யேசுநாத சுவாமியையும் சகல சாதி சனங்களும் அறிந்து ஏற்றுக்கொள்ளவும் கிருபைகூர்ந்தருளும்.



## சதாசகாயமாதா கோணம்

### அவரது 100-வது நோவனை

பொறளை சகலஅர்ச்சியசிஷ்டர்கள் ஆலயத்தில் சதாசகாயமாதா நோவனை மிக்க பக்தி சிரவணத்துடன் நடைபெற்றுவருவது எல்லோரும் அறிந்ததே. நாம் இப்போது எடுத்துக்கூறும் சம்பவம் ஒருபுறொட்டஸ்தாந்த ஆசிரியரைப்பற்றியது. அவர் ஓர்கிராமிய கத்தோலிக்க பாடசாலையில் ஆசிரியத்தொண்டாற்றி வருபவர். அவர் தமது நூறுவது நோவனையைச் செய்துமுடித்திருக்கிறார்.

இரண்டுவருடங்களுக்குமேல் இக் காலங்கண்ட—அனுபவம்நிறைந்த—பலராலும்சங்கிக்கப்பட்ட ஆசிரியர் அநேக அநாமதேய கடிதங்களைப்பெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார். ஒருவிதநியாயமும் இல்லாமல் அநேகமாய் நாள்தோறும் கோள், குண்டணி, அவதூறுநிறைந்த கடிதங்களோ, கடிதஅட்டைகளோ அவருக்கு வந்துகொண்டிருந்தன. அது அவரின் மனநிம்மதியைக் குலைத்தது. மனக்குழப்பத்தைத் தந்தது. இதைத் தடுக்க ஏதுசெய்வதெனத் தெரியாது தயங்கிக்கொண்டிருக்கும்வேளை அவருடைய உடன்ஆசிரியர்களில் ஒருவரான ஒருகத்தோலிக்கர் ஒருபுதனகிழமை அவரைப் பொறளையில்நடைபெறும் சதாசகாயமாதாவின் நோவனைக்குக் கூட்டிச்சென்றார். அன்று ஹெறத்சுவாமியார் அசம்பாவிதமாய் அவதூறுஎன்னும் விஷயம்பற்றிச் சிறுபிரசங்கம் செய்தார். அந்தப்பிரசங்கம் ஆசிரியரின்மனதில் பசுமரத்தாணிபோலப் பதிந்தது. பிரசங்கத்தின் சில பாகங்களைத் தான்வைத்திருந்த குறிப்புப்புத்தகத்திலும் எழுதிக்கொண்டார். அக்குறிப்புக்களை இந்நாள்வரை கவனமாக அவர் வைத்திருக்கிறார். தேன் தொட்டார் கைசூப்புவார் என்பார்கள். அதுபோல ஆசிரியர் முதலாம்நோவனையினால் அடைந்த மனச்சாந்தியின் பயனாக 2-ம் 3-ம்புதன்கிழமைகளில் மாத்திரமல்ல, கடந்த 100புதன்கிழமைகளிலும் நோவனைபக்திமுயற்சியில் பங்குபற்றினார். எவ்விதம் அநாமதேயகடிதங்கள் வந்தனவோ, அதேபோன்று, அதிசயவிதமாக அவைமுற்றாக வராதொழிந்தன. இந்தப்புரொட்டஸ்தாந்த ஆசிரியர் சதாசகாயமாதாமட்டில் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கும், அவமட்டில் வைத்திருக்கும் அன்புக்கும் அளவேஇல்லையெனலாம. தேவதாயாரின் புண்ணியங்களைக் கண்டுபாவித்து நல்லவர்களாய் வாழவேண்டுமெனத் தமதுமாணவர்களுக்கு அவர் நாளாந்தம் இடித்திடித் தோதிவருகிறார்.

தனது மதவிசுப்புவின் கருமகர்த்தாக்களில் ஒருவராயிருந்தும், சகாயமாதாவின் நோவனைக்குப் போகிறாரே என்று பலரும்குறைகூறியும், கடிந்தும் இருக்கிறார்கள். அவர்களது குறைகூறுதலுக்கு இலக்காயிருந்தும், அவர் அதைச் சட்டைபண்ணாது, சதாசகாயமாதாவுக்குத் தனதுநன்றியைத்தெரிவிக்க நோவனைப் பக்திமுயற்சிக்கு ஒழுங்காகச் சென்றுவருகிறார். இவருடையமனைவியும், ஒருபுரொட்டஸ்தாந்த மாதுவாயிருந்தும், தன்கணவரோடு சதாசகாயமாதா நோவனைப் பக்திமுயற்சியில் பங்குபற்றிவருகிறா.

இவர்களின் எதிர்காலம் எப்படியாகுமோ? ஆருக்குத்தான் தெரியும்.? ரோமான்கத்தோலிக்க திருச்சபையை நாடிச்செல்லும் எத்தனையோயாத்திரிகர்களுக்கு வழிகாட்டும் நட்சத்திரமாக விளங்கும்தேவதாய்பத்தி இந்தப் புரொட்டஸ்தாந்த கிறீஸ்துவர்களைத் தேவகுமாரனின் உண்மைத் திருச்சபையிற் சேர்த்துவைக்க வேண்டுமென மன்றாடுவோமாக. சதாசகாய மாதாவின் போர்வையுள் தங்கியிருக்கப் பாக்கியம்பெறும் ஒருவராவது அவவையும், அவவின் திருக்குமாரனையும் விட்டுப்பிரிதல் முடியாதகாரியம்.

---

## தெருவிபத்துகளும் மரணங்களும்

இலங்கைவீதிகளில் ஏற்பட்டுவரும் விபத்துகளாலே 48 மணிநேரத்துக்கு—அதாவது இரண்டுநாளைக்கு ஒருவர் வீதம்இறக்க, ஒருநாளைக்கு இருவர் வீதம் கடூரகாயம் அடைவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆறு மாதங்களிலும் நடைபெற்றதாகப் பதியப்பட்டுள்ள 3,841 விபத்துகளிலும் 1,850 பாதசாரிகளும், 761 சைக்கிள் காரரும், 880 பிரயாணிகளும், 415 சாரதிகளும் காயமடைந்தும், சீவமோசமடைந்துமிருக்கின்றார்கள். இந்தவிபத்துகளில்அநேகம் பகற்காலத்திலே நல்ல லாம்பரமான வேளைகளில் நடந்திருக்கின்றன.

# யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் மரியாயின் புனிதவருடக் கொண்டாட்டம்

## ஞானோபதேசக் காட்சியும் சமாகமமும்

## ஐப்பசி 7,8,9,10.

**ஐப்பசி 7, வியாழன் :**

| | |
|---|---|
| மாலை 6 மணி : | ஆசனக் கோவிலில் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம். |
| ,, 6-30 மணி : | ஞானோபதேசக் காட்சித் திறப்புவிழா. |

**ஐப்பசி 8 வெள்ளி, 9 சனி :**

| | |
|---|---|
| காலை 6-30 மணி : | ஆசனக் கோவிலில் திவ்விய பூசை. |
| ,, 8 மணி—மாலை 8 மணி : | ஞானோபதேசக் காட்சி. |
| ,, 10 மணி—10-30 மணி : | உபந்நியாசம். |
| மாலை 4 மணி—4-30 மணி : | உபந்நியாசம். |
| ,, 5 மணி | காட்சிமைதானத்தில் திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம். |
| ,, 6-30 மணி : | படக் காட்சி. |

(சனிக்கிழமை மாலை 5-30 — 6 மணிவரையும் இன்னுமோர் உபந்நியாசம் இருக்கும்.)

**ஐப்பசி 10 ஞாயிறு :** **சமாகம தினம்**

| | |
|---|---|
| காலை 6 மணி : | சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் திவ்விய பூசையும், சற்பிரசாத விருந்தும். |
| ,, 8 மணி—மாலை 2 மணி : | ஞானோபதேசக் காட்சி. |
| ,, 9-30 மணி — 10 மணி : | உபந்நியாசம். |
| ,, 10-30 மணி : | வெளியூர்களில் இருந்துவரும் பிள்ளைகளின் வசதிக்காக ஆசனக்கோவிலில் திவ்விய பூசை. |
| மாலை 4 மணி : | கல்லூரி மைதானத்திலிருந்து செபமாலையுடன் முற்றவெளிக்கு மகா சுற்றுப்பிரகார ஆரம்பம். |
| மாலை 5-30 மணி : | (1) மாதாவின் திருச்சுரூபம் முற்றவெளியைச் சேருதல். |
| | (2) ஆர்ப்பரிப்பு. |
| | (3) தத்ரூபக் காட்சியுடன் திருச்செபமாலை. |
| | (4) ஞானப்பூச்செண்டுகள் சமர்ப்பணம். |
| | (5) மாதாவுக்கு நம்மைப் பாதகாணிக்கையாக்குஞ் செபம். |
| | (6) திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம். |

— முற்றும் —

### சில குறிப்புகள்

1. சமாகம 'கமிட்டியார்' இடமிருந்து "மரியாயின் சமாகம கைத்துணை" எனும் புத்தகம் 20 சதவீதமும், 'றொசெற்' எனுஞ் சின்னம் 5 சதவீதமும் பெற்றுக்கொள்ளலாம்.
2. ஞானோபதேசக் காட்சியைஒட்டிய விபரங்களடங்கிய 'கைத்துணை" காட்சிமைதானத்தில் 5 சதவீதம் பெற்றுக்கொள்ளலாம்.
3. காட்சிப்பொருட்களை அமைப்பதற்கு உதவியாளரை அனுப்பாத பாடசாலைகள் தத்தம் காட்சிப் பொருட்களை ஐப்பசிமாதம் **6-ந் திகதி புதன்கிழமைக்குப் பிந்தாமல்** அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. காட்சிப் பொருட்கள் வைக்கப்படும் சாலைகள் 6-10-54 புதன் கிழமை மாலை 4 மணிக்கு ஆயத்தமாகவிருக்கும்.
5. உபந்நியாசங்களிலும், படக்காட்சிகளிலும் பங்குபெற விரும்புவோர் காட்சிக்காரியாலயத்தில் இலவசமாகக் கொடுக்கப்படும் பிரவேசச்சீட்டுகளை நேரகாலத்துடன் பெற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல், இடவசதிஇன்றி இடர்ப்படநேரிடும்.
6. உபந்நியாசங்களில் ஆசிரியர்களுக்கென விசேஷவிஷயங்கள் எடுத்தாளப்படுமாதலால், எந்தஉபந்நியாசத்தையும் தவறவிடாது சகல ஆசிரியர்களும் சமுகமளிக்க வேண்டுமென அன்பாய் அழைக்கப்படுகிறார்கள்.
7. ஞானோபதேசக் காட்சிச்சாலைகளில் உதவிபுரியவிரும்பும் ஆசிரியர் ஞானோபதேசக் காட்சிஅதிபருடன் வேண்டியஒழுங்கு பண்ணிக்கொள்ளலாம்.
8. கத்தோலிக்கபாடசாலைகளுக்கு ஐப்பசிமாதம் 8-ந் திகதி வெள்ளிக்கிழமையும், 11-ந் திகதி திங்கட்கிழமையும் லீவுநாட்களாகுமெனப் பிரதமமுகாமைக்காரர் தெரிவிக்கிறார். தலைமைஆசிரியர்கள் இ[illegible]வனிக்கவும்.
9. ஞானோபதேசக்காட்சி சம்பத்திரிசியார்கல்லூரியில் நடைபெறும்.

## மிஷன் ஞாயிறு

வழக்கம்போல இவ்வாண்டும் ஐப்பசிமாதம் 3-ம் ஞாயிறை (24-ம் திகதி) மிஷன்ஞாயிறாகக் கொண்டாடுவோம். எனவே, நமதுஉள்ளங்களில் உற்சாகம் ஓங்குகிறது. அத்துடன் மிஷன் நாடுகளில் நம்மவர்கள் புரியும் எண்ணற்றநன்மைகளை நினைத்து இன்புறுகிறோம். ஆனால், இந்தோ-சீனா கோறியா, சீனா, மஞ்சூரியா போன்ற பாகங்களில் வீரிட்டெழும் எதிரிகளின் பலத்தால் அங்குள்ள மக்களின் துயரைஎண்ணி ஏங்குகிறோம்.

எக்காலமும் உண்மையுடன் ஒளிரும் தனதுஉயர்ந்த கொள்கைகளை என்றுமே காப்பாற்றுவது சத்திய திருச்சபையின் நோக்கம். எவ்விததுன்பத்திலும், இடைஞ்சலிலும் தனது மாறாக்கொள்கைகளைச் சிறிதும் விட்டுக்கொடுப்பதில்லை சத்திய திருச்சபை. "மனத்திடமாயிருங்கள்; நான் உலகத்தைச் செயித்தேன்" (அரு. 16:33) எனக்கூறும் திவ்வியயேசுவின் திருவாக்கைநம்பி, இறுதியில் நமது திருச்சபையின் கொள்கைகளே—உண்மையும் சமாதானமுமே — வெற்றிபெறும்என உறுதிகொள்ளுவோம்.

அநீதமாகத் துன்பப்படும் நாடுகளிலுள்ள அனைவருக்கும் நமது அனுதாபத்தைத் தெரிவிப்பது நம்முடைய கடமையாகும். ஏனைய மிஷன்நாடுகளில் உண்மைக்காக உழைப்பவர்கள் எங்கிருப்பினும்சரி, யார் மத்தியில் உழைப்பினும்சரி, எவ்வித வேலையில் ஈடுபடினும்சரி அவர்கள் தனிமையாயிருப்பதாக எண்ணவேண்டாம். அவர்களின் துன்பங்களை உணர்ந்து, அவர்களுடன்சேர்ந்து அவர்களுக்குத் துணைபுரியத் தயாராயிருக்கும் ஆயிர, ஆயிரக்கணக்கான கிறீஸ்தவர்கள் அவர்களுடன் உள்ளனர் என்பதை மறந்துவிடவேண்டாம். குறிப்பாக, மிஷன்ஞாயிறன்று அவர்கள் காட்டும் ஆர்வம் இதற்கு ஓர்சான்றாகும். "அப்போஸ்தல அலுவலிலே இருப்போருக்குத் துணைபுரிவோர், அவர்கள் அடையும் பிரதிபலன்களையே தாமும்பெறுவார்" என்னும் உண்மை, இவர்களெல்லோருக்கும் மேலும் அதிகமதிகமாகத் துணைபுரிய யாவரையும் தூண்டுவதாக!

மேற்சொன்ன செய்தியை ரோமாபுரியில், விசுவாசப் பரப்புதற்சபையின் காரியதரிசியாயிருந்த மகாவந். பிலிப் பெர்நார்தினி ஆண்டவரவர்கள் உலகமெங்கும் அனுப்பியிருக்கிறார். மிஷன்ஞாயிறன்று நாமும் நம்மாலான உதவியைத் தாராள மனதுடன்செய்ய முன்வருவோமாக!

---

23-9-54-இல் "காவல"னில் வெளியான "தெரியுமா" எனும் தலையங்கத்தின்கீழ் கேட்டிருந்தகேள்விக்கு அநேகர் தங்கள்விடைகளை பிந்தி அனுப்பியிருந்தமையால் அவர்களின்பெயர்கள் பத்திரிகையில் இடம்பெறவில்லை.

அண்ணா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்லுவது:

அருமைச் சகோதரங்களே!

சகாய நாதன் நேற்றுக்காலை பாடசாலை சென்றபொழுது தலைமை ஆசிரியை சிஸ்றர் தெரேசா மூன்றும் வகுப்பு அறைச் சுவரில் ஏதோ பெரிய கடுதாசி ஒட்டிக்கொண் டிருந்தா.

நாதனைக் கண்டதும் சிஸ்றர்: "இங்கே வாரும் தம்பி நாதன்! இந்தக் கடுதாசியில் கொஞ்சம் பசை பூசும்" என்றார். சிஸ்றர் சொன்னபடியே நாதன் செய்துகொண்டு இருக்கும்பொழுது பல கேள்விகள் அவன் மனசில் எழுந்தன. ஒவ்வொன்றாய்க் கேட்டான்.

"இது ஏன் சிஸ்றர்?"

"சுவரிலே ஒட்டுவதற்கு."

ஒட்டும்பொழுது பார்த்தான். நடுவிலே மாசில்லாத மாதா படம். அவவுடைய பாதத்திலே யாழ்ப்பாண மேற்றிராசனம் கீறப்பட்டு இருந்தது. ஒருபக்கத்திலே ஞானேபதேசக் காட்சி என்று இருந்தது.

"என்ன காட்சி சிஸ்றர்?"

"ஞான உபதேசத்தில் படிக்கிற வேத சத்தியங்களை விளக்கும் படங்கள், சித்திர வகைகளின் காட்சி."

"நீங்கள் காட்டும் படங்கள் போலவா சிஸ்றர்?"

"அவற்றைப் போலவும், அவற்றைவிடத் திறமாகவும் இருக்கும். படங்கள் மாத்திரமா? சுரூபங்கள், மற்றும் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட் டிருக்கும். வேத அறிவை வளர்ப்பதற்கும், சிறுவர் மனதில் அதைப்பதியச் செய்வதற்கும் என்னென்ன உதவுமோ, அந்த உபகரணங்கள் எல்லாவற்றையும் உபயோகித்து ஞான உபதேசப் பொருளை விளங்க வைப்பதே இந்தப் பொருட் காட்சியின் நோக்கம்."

"அப்ப நீங்களும் படம் கீறுகிறீர்களோ?"

"ஆம்."

"என்ன படம் சிஸ்றர்?"

"அந்த இரகசியத்தை உமக்குச் செல்ல முடியாது; போய்ப் பார்க்க வேணும்; அங்கே எல்லா........

அதற்குள் பாடசாலை ஆரம்ப மணியடித்தது.

உங்கள் அன்புள்ள அண்ணா



## அண்ணாவின் விசேஷ செய்தி

அருமைச் சகோதரங்களே!

இதோ! மரியாயின் சமாகம கொண்டாட்டம் அடுத்து வந்துவிட்டது. அது நடக்கும் தினங்கள் அடுத்து நெருங்கவே உங்கள் குதூகலமும் அதிகரிக்கிறது. அதற்குப் பல காரணங்கள் உண்டு.

மரியாயின் வருடத்தை யாழ்ப்பாண மேற்றிராசனம் முழுவதும் உள்ள நீங்கள் தனித்தனியே கொண்டாடிய பிறகு சமாகமம் ஒன்றிலே எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து பங்குபற்றி அதைவெகு ஆடம்பரமாகக் கொண்டாடவிருப்புகிறீர்கள். அதில் ஞானேபதேசப் பொருட் காட்சியையும், சமாகம ஊர்வலத்தையும் சிறப்பாகக் காண விருக்கிறீர்கள்.

ஞானேபதேசப் பொருட்காட்சி யாழ்ப்பாண மேற்றிராசனத்தில் நடப்பது இதுவே முதன்முறை. செபமாலை சொல்லும் பொழுது காரணிக்கங்கள் அபிநயக் காட்சியுடன் விளக்கப் படும்.

இவைகள் எல்லாவற்றிற்கும் நடுநாயகமாக விளங்க விருக்கும் ஞானப் பூச்செண்டு தயாரிக்கிறீர்களா? அதை மாதாவின் பாதத்தில் வைப்பதற்கு நீங்கள் வருவீர்களா?

உங்கள் எல்லாரையும் காண மிகவும் ஆவலா யிருக்கிறேன். நிச்சயமாய்ச் சந்திப்போம் என்று காத்து வழி பார்த்திருக்கிறேன்.

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## வாருங்கள்!

'ஜெயம்'

I

வாருங்கள் வாருங்கள் பாலர்காள்—நாங்கள்
வாயாரத் தாய்புகழ் பாடுவோம
சேருங்கள் ஒன்றாகப் பாலர்காள்—தாயைச்
செங்கரம் கூப்பிமன் றாடுவோம்

II

மண்ணுக்கும் விண்ணுக்கும் ராணியாம்—எங்கள்
மங்களத் தாய்மரி பாதமே
எண்ணரும் மாலைகள் சூடுவோம்—நாங்கள்
இன்னிசை பாடிக்கொண் டாடுவோம்

III

பாவிக் கடைக்கல மானதாய்—யேசு
பாலகனைத்தந்த தேவதாய்
பூவினில் எங்களைக் காக்கவே—அன்னை
பூம்பதம் நாளுமே வேண்டுவோம்

## கண்டு பிடியுங்கள்

1. போர்த்துக்கால், பெல்ஜியம், சீரியா, பிரான்ஸ் என்னும் இந்த நான்கு நாடுகளின் பெயர்களிலும் ஓர் அர்ச்சியசிட்டரின் பெயர் மறைந்து நிற்கின்றது. கண்டுபிடியுங்கள்.

2. சீயம், பவேரியா, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து என்னும் இந்த நான்கு நாடுகளின் பெயர்களிலும் மற்றோர் அர்ச்சியசிட்டரின் பெயர் மறைந்திருக்கிறது. கண்டுபிடியுங்கள்.

3. சந்தனம், குங்குமம், நன்மை, தீமை, யோகம், ஓர்மம் என்னும் இந்த ஆறு சொற்களிலும் ஓர் அர்ச்சியசிட்டரின் நாமம் மறைந்திருக்கிறது. கண்டு பிடியுங்கள்.

4. மகரம், துகரம், நாடகம், தாபகம் என்னும் நான்கு சொற்களிலும் ஏழு எழுத்துக்கள் கொண்ட ஒரு நாமம் அடங்கியிருக்கிறது. நான்கு சொற்களிலும் கடைசி எழுத்துத்தான் அந்தநாமத்தின் கடைசிஎழுத்துமாகும். கண்டுபிடியுங்கள். J.A.G.

## பூசைகாணவந்த தம்பதிகள்

பிரான்சிலே நோர்மான்டியைச் சேர்ந்த போவேயின் கிராமத்தில் வண. வோனிசுவாமியார் தமதுநீண்ட அங்கிக்குமேலாக நீலவர்ணமான மிருதுவற்ற ஓர்போர்வையைப் போர்த்திக்கொண்டும், தமதுபாதங்களில் மரப்பாதரட்சைகளைத் தரித்துக்கொண்டும் தம்முடையதோட்டத்திலே உருளைக்கிழங்குகள் கிண்டியெடுத்துக் கொண்டிருந்தார். அப்போது குருமனைக்கு வெளியே திடீரெனக் கார்ஒன்று வந்து நின்றதும், அதிலிருந்து ஓர்சீமாட்டி கீழேஇறங்கிவந்தாள்.

வோனிச் சுவாமியார் அதைக்கண்ணுற்றதே தமதுஅறைக்குள் விரைந்து ஓடிச்சென்று தாம போர்த்திருந்த போர்வையையும், தரித்திருந்த மரப்பாதரட்சைகளையும் சட்டெனக்கழற்றினார். கைகளிலிருந்த மண்ணைக் கழுவிப்போக்கினார். அதன்மேல் தம்மைச் சந்திக்கவந்த சீமாட்டியை வரவேற்கத் தீவிரித்துச்சென்று, தாமவரச் சுணங்கியதையிட்டு மன்னிப்புக்கோரினார். ஆனால், சீமாட்டியோ அதனைச்செவியில் விழுத்தாதவள்போன்று அவரை நோக்கி, அடுத்த ஞாயிற்றுக்கிழமை காலை திவ்வியபூசை எத்தனைமணிக்கு என்பதை அறிந்துகொள்ளத்தான் வந்ததாகவும், ஓர்நோர்மான்டிய மாதுவாகிய தான அன்று தேவைப்படும் நற்கருணை அப்பங்களைப் பாரம்பரியப்படி நன்கொடையளிக்க விரும்புவதாகவும் தெரிவித்தாள்.

சுவாமியாருடன் இந்தச்சீமாட்டி அரைமணிநேரம் சம்பாஷித்ததன் மேல் அவ்விடம்விட்டகன்று அக்கிராமத்தினூடாகச் செல்லும்போது, அடுத்தஞாயிற்றுக்கிழமைப்பூசைக்குத் தேவைப்படும் 250 சிறியநற்கருணை அப்பங்களையும் தயாரித்துவைக்குமாறு ஒழுங்குசெய்துவிட்டுப் போயினாள். அதனால் ஞாயிற்றுக்கிழமைப் பூசையின்போது அச்சீமாட்டிக்கென ஓர் நல்லஆசனம் தருவித்துக் கோவிலிலே வைக்கப்பட்டிருந்தது. ஆனால், அன்று காலை அவள் கோவிலுக்குவந்தபோது தனியேவரவில்லை. மற்றோர்சீமானுடன் அங்குவந்து சேர்ந்தாள். அப்போது மற்றோர்ஆசனத்துக்கு எங்கேபோகிறதென்று சுவாமியார் விழிக்கவே, அந்தப்பெரியார் அவரைநோக்கி: "நாங்கள் மரியாதைபெறவென்று இங்குவரவில்லை; நாங்கள் உமதுபங்குக்கிறீஸ்தவர்கள்; [illegible] கோவிலுக்குவராவிடின் எனதுகடமையில் தவறியவராவேன்" என்று சொல்லிவிட்டு, இருவரும் அங்குபோடப்பட்டிருந்த வைக்கோற்பாயின்மேல் முழந்தாளிடச் சென்றார்கள். ஆனால், சுவாமியார் இருவருக்குமாக விரைவிலே ஆசனங்கள்தருவித்து உதவினார். பூசைமுடிந்தது இருவரும் சுவாமியாருக்கு நன்றிதெரிவித்துவிட்டுத் தங்கள்வாசஸ்தலஞ் சென்றார்கள் இத்துடன்சம்பவம் முடிவுற்றது.

இந்தச்சீமானும், சீமாட்டியும் எங்கிருந்து வந்தார்கள்? பரீஸ்நகரிலுள்ள தங்கள் பெரியமாளிகையிலிருந்து அங்குவந்திருந்தார்கள். டக்றர்மாரின் ஆலோசனைப்படி, மருந்துசம்பந்தமான ஸ்நானஞ்செய்யவே தமதுசொந்தப்பதியான நோர்மான்டிக்கு இந்தச்சீமான் வந்திருந்தார். இவர்தான் பிரான்சிய ஜனாதிபதியான றெனே கொட்ரி அவர்கள். அந்தச்சீமாட்டிதான் அவருடையபாரியார். ஜனாதிபதிதம்பதிகள் ஞாயிற்றுக்கிழமைக் கடன்பூசைகாண்பதில் எத்தனைகருத்தாயிருக்கிறார்கள்! நீங்களும் அப்படியா?

— J. A. G.

● இமயமலையின் மகாஉன்னத சிகரங்களிலொன்றாகிய மகாலுசிகரத்தின் உச்சிக்கேறிச் சமீபத்திலே அதனை வெற்றிகொண்ட எட்டுப்பிரான்சியர்களின் கோஷ்டியில் வண. பியேர் போடெற்எனும் குருப்பிரசாதியும் ஒருவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவத்தை மன்னிக்கும் அதிகாரம்

யேசு தமது சொந்த ஊருக்கு வந்த பொழுது திமிர்வாதம் பிடித்த ஒரு மனிதனை அவரிடம் கொண்டு வந்தார்கள். யேசு அவனைப் பார்த்து :“ நம்பிக்கையாய் இருமகனே ! உன் பாவங்கள் மன்னிக்கப் பட்டன ” என்றார்.

அதைக் கேட்ட வேத விற்பன்னர் சிலருக்கு அது பிடிக்கவில்லை தேவ தூஷணஞ் சொல்லுகிறார் என்று எண்ணினார்கள்.

யேசு சொன்னார்: “ எழுந்து நட என்கிறதோ, உன்பாவங்கள் மன்னிக்கப் பட்டன என்கிறதோ எது இலகுவானது ? மனுமகனுக்குப் பாவ மன்னிப்புக் கொடுக்க அதிகாரம் உண்டென்று நீங்கள் அறிந்துகொள்ளுங்கள்.”

திமிர் வாதக்காரனைப் பார்த்துச் சொன்னார் : “ உன் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு எழுந்துபோ.”

இந்தப் புதுமையைக் கண்ட சனங்கள் ஆச்சரியப் பட்டுச் சருவேசுரனைப் புகழ்ந்தார்கள்.

(ஞாயிறுசுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## கணிதப்பகுதி

1. பின்வரும் சதுரங்களிற் காலியாக விடப்பட்டிருக்கும் இடங்களை நிரப்புக. இடமிருந்து வலமாகக் கூட்டினாலும், மேலிருந்து கீழே கூட்டினாலும், மூலையிலிருந்து மூலைக்குக் குறுக்காகக் கூட்டினாலும் 65 வரவேண்டும். நிரப்பும் இலக்கங்கள் 1 முதல் 25 வரைக்குள் இருத்தல் வேண்டும். ஒருமுறை நிரப்பியஇலக்கம் மறுமுறை பாவிக்கப்படாது. நிரைப்படுத்துங்கள் பார்க்கலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | | | | 15 |
| | | | | |
| | | 13 | | |
| | | | | |
| 11 | | | | 9 |

2. கோகிலபுரி என்றவொரூர். அந்த நல்லூரைக் குணசேனன்என்னும் அரசன் ஆண்டுவந்தான். அவன் தனது அந்தியகாலம் கிட்டிவருவதைக் கண்டு தன்மக்கள் மூவரையும் அழைத்தான். தான் இதுகாலவரை பாதுகாத்து வைத்திருந்த 9 முத்துகளையும் கொடுத்து : மக்காள் ! நீங்கள் மூவரும் இந்த முத்துக்களைத் தொகையிலும், பெறுமதியிலும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்றான்.

முத்துக்களின் பெறுமதி

1-ம் முத்து — 1,000 ரூபா
2-ம் ,, — 2,000 ,,
3-ம் ,, — 3,000 ,,
4-ம் ,, — 4,000 ,,
5-ம் ,, — 5,000 ,,
6-ம் ,, — 6,000 ,,
7-ம் ,, — 7,000 ,,
8-ம் ,, — 8,000 ,,
9-ம் ,, — 9,000 ,,

பிள்ளைகளே ! அந்த அரசகுமாரர்கள் எப்படிப் பகிர்ந்து கொண்டார்கள் என்பதை நீங்கள் கூறுங்கள் பார்க்கலாம் !

3. ஒருவன் ஒருகளிபட்டு நூலை நூறு ரூபாவாக வாங்கி அதனை நூற்று ஐம்பது ரூபாவாக விற்றால் அவனுக்கு லாபமோ நஷ்டமோ எவ்வளவு ?

ஜெயராணி,
எழாலை.

## அமலோற்பவி அவதரியாவிடின் ...

“ யுவன் ” — கரம்பொன்

1

அலகைதனின் பெருஞ்சூது அகிலமோங்கு
அடைத்தபரக் கதவுசதா அடைத்தேகிற்கும்
நிலமுழுதும் பாவவிருள் நிறைந்துசூழும்
நிலைகலங்கி மாந்தருளம் நெருப்புமூழும்
மலமகற்ற வறியாத மனிதஆன்மா
மறுகியெரி நரகினிலே மங்கிவீழும்
திலகமென விளங்குதவி தரசன்வந்த
திருக்குலமும் பொலிவிழந்து தேயுமன்றே !

2

உத்தமனார் யேசுபரன் உதிக்கமாட்டார்
உலகமுதல் மனிதரினல் கவிந்தபாவ
நத்தமதை நீக்கியிரார் நாளுந்தம்மை
நாமெல்லாம பெற்றுவரும் நலமுஞ்செய்யார்
சத்தியநற் திருச்சபைக்குத் தலைமைதாங்கார்
சஞ்சலத்தை நீக்கவல்ல தாயும்தாரார்
முத்தியிலும் தேவனது தூதரன்றி
முழுநிலத்தோர் ஒருவருமங் கிருக்கார்இன்றே !

3

ஆதாமும் அடியடியாய் அவரின்பின்னே
அரனார்க்கே யடியவராய் அவனிவாழ்ந்த
தாதாக்கள் தாகமென்றுந் தணியாதோங்கும்
தலைக்காலத் தெய்வமொழி தானும்பொய்க்கும்
வேதாக மந்திரட்டித் தந்தவல்லோர்
வித்தகமும் இத்தலத்தே விழலாய்ப்போகும்
மாதாவென் றழைக்கவொரு மங்கையின்றி
மாணிலமும் மகிழ்விழந்தோர் அறைதையாகும்.

4

மங்காத தவஜ—வக்கீன் ஆனுள்என்னும்
மாட்சிமிகு தம்பதிகள் மலடர்ஆவர்
சங்கீன்ற வெண்தரளத் தகவுசார்ந்த
சஞ்சூசை முனிபிரமச் சாரியாவர்
தங்காத முகில்வடிவிற் தேவன்வந்தே
தரித்தொருகால் இருந்ததிருக் கோயில்வாழ்ந்த
பொங்காத பொறைக்குரவர் சிமியோன்தானும்
பொறையிழந்தே துடித்துமடி போதுபோல்வர்.

## சரியான விடை

மரிக்கும் நாளை மனிதன் அறியான்.
காயாயின் பழுத்து விழும்தானே.
சமாதியைக்கண்டு தாய் புலம்பினள்.
கமம்செய்யக் கரைச்சி சென்றான்.
ஐப்பொருள் அல்ல, கைப்பொருள்.
பசிவந்தால் பத்தும் பறந்திடும்.
எட்டுப் பணம் முதல் வேண்டும்.
பத்துப்பத்து—பதிற்றுப்பத்து.
வரையின்றி வளங்கிய வள்ளல்.
நடையிலேசென்று நகர்அடைந்தான்.
பேறும் பேறுதான் யாது ?

**மரியாயின் சமாகமம்**
**ஐப்பசி எட்டு முதல்**
**பத்து வரை**
**நடை பெறும்**

சரியானவிடை அனுப்பியவர்கள் :

லூ. பர்ணபாஸ் பறுனாந்து,
ரோ. க. பாடசாலை, அரிப்பு.

கி. அன்ரனிஸ் குரூஸ்,
பெரியதெரு, மன்னார்.

ச. செசிலியம்மா,
ரோ. க. பாடசாலை, முதலியாகுளம்.

பெர்னதேத் சவிரிமுத்து,
மாரீசன்கூடல், இளவாலை.

ஆ. சேவியர் குலாஸ்,
சந்தானுள் ஆண்பாடசாலை, வங்காலை.

சா. புனிதசீலி,
ஊறணி.

க. ஜெனேவா,
தி. கு. கன்னியர்மடம், யாழ்ப்பாணம்.

தெரேசா [illegible]ம்பிள்ளை,
அலுக்கை, அளவெட்டி.

ஊர்சுலா நேசராணி,
ஊறணி, காங்கேசன்துறை.

## ஞானக் கூட்டுறவு வங்கி

பாத்திமாமாதாவின் பாத்திமாசெய்தியைப்பற்றி உலகில் கேள்விப்படாதவர் அருமையில் அருமை எனலாம். ஆயினும் அதன் உண்மை, கருத்து, நோக்கம் ஆதியவற்றை ஆராய்வார் வெகுசிலரே. ஆராய்ந்தாலும் அனுசரிப்பவர் அதிலும்சிலரே.

### பாத்திமாசெய்தி ஏன் முக்கியமானது ?

முதலாவது : நாளாந்த வாழ்க்கைக்கு அதிகம்அடிப்படையான அனுசாரங்கள்தான் இச்செய்தியின் பிரமாணங்களாய் அமைந்திருப்பதினால். அவைகள் :

(1) தினந்த செபமாலைத்தியானம்,

(2) மாசத்துக்கு ஒருமுறையாவது பாவசங்கீர்த்தனஞ்செய்து திவ்விய நன்மைபெறுவது,

(3) சுகபரித்தியாகமாம் தபமுயற்சிகள் என்பன.

இரண்டாவது : தற்கால உலகின் இன்னல்களுக்கேற்ற மாற்றுமருந்து இங்குளது.

(1) குடும்பங்களின் அந்நியோன்னியத்தை வளர்த்து ஒற்றுமையைக் காப்பாற்றும் மருந்து.

(2) விசுவாசத்தை உறுதிப்படுத்த வரப்பிரசாதத்தைக் காக்கும் லேகியம்.

(3) மாசற்றவர்களை மயக்கும் அஞ்ஞான, பதிதத் தனங்களுக்கும், உலகில் தாண்டவமாடும் அசுத்த அக்கிரமங்களுக்கும் கைகண்ட அவுடதம்.

(4) சிறுவர்களை மாசற்றதனத்திலும், பாலர் கன்னியர்களைப் பரிசுத்ததனத்திலும் காப்பாற்றும் மூலிகை.

(5) தனிப்பட்டவரின் மனந்திரும்புதலினால் குடும்பமும், குடும்பங்களினால் இராச்சியமும், இராச்சியங்கள் சீரடைவதினால் உலகமுழுவதையுமே சத்தியநெறிக்கும் நீதிமார்க்கத்துக்கும் மாற்றுமருந்து இங்குண்டு.

இந்த ஐப்பசிமாசம் பாத்திமாசெய்தியை நினைவூட்டும்மாசம். பரிசுத்த செபமாலைமாதாவின் மாசம். பரிசுத்த செபமாலைப் படையணியின் ஆறும்வருடம். எனினும் இற்றைவரையும் இதிலே 32,000 பேர்வரை அங்கத்தவர்கள் சேர்ந்திருப்பினும் இதைப்பற்றி அநேகர் இன்னுமே அறியாதிருக்கின்றனர்.

### பரிசுத்த செபமாலைப் படையணியென்றால் என்ன ?

(1) இது பாத்திமா செய்தியின் அனுசாரம், செயல்முறை.

(2) ஒருநகத்தோலிக்க செபச்சேனை.

(3) ஒருபலமிக்க பக்திச்சபை.

### இதனாலெய்தும் பலாபலன் யாது ?

(1) தினந்தசெபமாலையை நாம்தவறாது ஓதும்படி தூண்டப்படுகிறோம், ஏனெனில், குடும்ப செபமாலையைக் குறிக்கோளாகக் கொண்டது இச்சேனை.

(2) தேவதிரவியானுமானங்களைப் பெறுதற்குப் பின்போடாதபடி நாம் ஏவப்படுகிறோம்.

(3) கிறீஸ்துவனின் பிகிரார்ச்சிதமான தற்பரித்தியாக பாதையில் நாம் வழிநடத்தப்படுகிறோம்.

(4) சாங்கோபாங்க பாதையில் நாம்செல்லுமாறு வழிகாண்பிக்கப்படுகிறோம்.

(5) இரட்சணியநெறியில் வழிநடத்தப்படுகிறோம்.

(6) 32,000 பேருக்கு மேற்பட்ட பக்தர்களின் நற்கிரியைகளுக்கு நம்மைப்பங்காளிகளாக்கும் ஞானக்கூட்டுறவு வங்கியில் சேர்ந்துகொள்ளுகிறோம்.

அமலோற்பவதாயின் புனிதயூபிலி வருடத்தில் நாம்செய்யக்கூடிய சிறந்த சேவையாது? எடுக்கக்கூடிய நிலையான தீர்மானம்எது? மாதாவைப் பிரியப்படுத்துமாறு அவர்காட்டிய பாதையிலும் சிறந்தபாதை வேறுண்டா? பாத்திமாகுரலொலிக்குச் செவிசாய்ப்பதுதான் அந்தமார்க்கம். எப்படி ? பரிசுத்தசெபமாலைப் படையணியாகிய இந்தஞானக் கூட்டுறவுவங்கியில் வீமாத்தீர்வதினாலாகும். பதிவுப் பத்திரங்களில் பொருத்தனைக்குக் கையொப்பமிட்டுத் தலைமை ஆபீசுக்கு அனுப்பினால் உங்கள்பெயர் படையணிஇடாப்பிற் பதிவுசெய்யப்பட்டுப் பதிவுப்பத்திரங்கள் வழங்கப்படும்.

விபரம் வேண்டுவோர் பின்வரும் விலாசத்திற்கு எழுதவும்.

தலைவர்,
பரிசுத்தசெபமாலைப் படையணி,
சென் ஜோண்பொஸ்கோ கல்லூரி,
ஹற்றன். (இலங்கை)

## தமிழ் வேண்டும்

தமிழ்வேண்டும் என்பதைப்பற்றிப் “ பொன் ” அவர்கள் பாடிவெளியிட்ட பாவடிகள்போன்று பாடி அனுப்பியவர்களின் சில பாவடிகள் வருமாறு :

1. மண்ணும் எனக்கு வேண்டாம்
மணியும் எனக்கு வேண்டாம்
கன்னல் சுவையும் வேண்டாம்
கன்னித் தமிழே வேண்டும்

2. சீரும் எனக்கு வேண்டாம்
சிறப்பும் எனக்கு வேண்டாம்
பேரும் எனக்கு வேண்டாம்
பெருமைத் தமிழே வேண்டும்

ச. ம. றிச்சேட்,
பாலாவிறோட், ஊர்காவற்றுறை.

1. தங்க அணியும் வேண்டாம்
தொங்கு மணியும் வேண்டாம்
மங்கும் புகழும் வேண்டாம்
சங்கத் தமிழே வேண்டும்

செல்வி டி. சேபஸ்ரியன்பிள்ளை,
கொழும்பு.

1. நாடும் எனக்கு வேண்டாம்
நகரும் எனக்கு வேண்டாம்
வாடும் அழகும் வேண்டாம்
வண்ணத் தமிழே வேண்டும்

ஜே. பி. ஏ. அழகக்கோன்,
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லாரை

மக்களுக்குததேவைப்படும் உணவுக்குச் சேர்க்கவேண்டிய கீரைவகைகளில் வல்லாரையும் பிரதானமானது. இதனை உபயோகப்படுத்திவரின் அதுமூளையைப் பலப்படுத்தும். மறதியைக் குணமாக்கும் ஞாபகசக்தியை அதிகப்படுத்திப் புத்திக்கூர்மையை உண்டாக்கும். ஆயுளைவிருத்திசெய்து சப்த தாதுக்களையும் போஷித்துத் தேகத்தைப் பலப்படுத்தும். இரத்தத்தைச் சுத்திசெய்யும். கபக்கட்டை நீக்கிக் குரலை இனிமைப்படுத்தும். இருதயத்தைப் பலப்படுத்தும். இரத்தபித்தம், இருமல், கபரோகம், சுவாசகாசம் ஆகியவற்றை நீக்கும். காமாலை, பாண்டு, வீக்கம், மலபந்தம், அதிமூத்திர ரோகம் இவற்றைப் போக்கும். வல்லாரையை அதிகமாக உண்டால் பேதியாகும். மிதமாய்உண்டால் சிறிதுபேதியாகும். அஸ்திசுரம், பித்தசம்பந்தமானரோகம், கபசம்பந்தமான ரோகம், கண்டமாலை, குஷ்டம், வெண்குஷ்டம், கிரந்தி, பலவகைப்புண், மேகப்படை, சொறிசிரங்கு, விரணம் இவைகளை நீக்கும். சுரக்கட்டி, வாயு ரோகங்கள்தீரும். வசிகரம் உண்டாகும். பலவகை விடங்கள் நீங்கும். வயிற்றுக்கிருமிகள் வெளிப்படும். பைத்தியரோகம், காக்கைவலிநீங்க உதவியாகும். நரம்பைப் பலப்படுத்தி உற்சாகத்தை உண்டாக்கும்.

வல்லாரையை வாதுமைப்பருப்பு, முந்திரிகைப்பருப்பு, தேங்காய், தேங்காய்ப்பால், பசுவின்பால், பசுநெய் ஆகியவைகளுடன் சேர்த்து உண்டால் உடலுக்கு நன்மையைச் செய்யும். துளிர், பழுத்தல்இலைகளைநீக்கி நடுத்தரமான நல்லஇலைகளைஎடுத்து உபயோகித்துக் கொள்ளுதல் சாலச்சிறப்புடைத்தாகும். வல்லாரையுடன் பழப்புளியைச்சேராது விடின் சிறந்தநன்மை பயக்கும். காலையிலே வெறுவயிற்றில் ஐந்துஅல்லது ஆறு இலைகளை நன்றாகமென்று சாப்பிட்டுவரலாம். அன்றேல் ஒருகட்டு வல்லாரையைத் துப்புரவுசெய்து சிறுகஅரிந்து ஐந்து, ஆறு ஈரவெங்காயம், மூன்று, நான்கு பச்சை மிளகாய்களைச் சிறுகஅரிந்து ஒன்றுகக்கலந்து உப்புநீரும், எலுமிச்சம்புளியும், தேங்காய்ப்பூவும் இட்டுப்பிசிறி உணவுடன் சேர்த்துக் கொள்ளலாம். அல்லது அரைத்தும் சாப்பிட்டுவரலாம். அன்றேல் வல்லாரையை அரைத்துப் பசுப்பாலில் கலக்கிக் காலையில் குடித்துவரலாம். துவைத்துச் சாறுகவும் குடிக்கலாம். நிழலில்வாடவைத்துச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் தேனில்அல்லது நெய்யிற்சாப்பிட்டுவரலாம். இதனை வெயிலிலோ அல்லது அடுப்பிலோஇட்டால் இதன் சத்து அகன்றுவிடுமென்பதாக நூல்கள் பகருகின்றன. இதற்குக் குஷ்டத்தை நீக்கக்கூடிய தன்மைஉண்டு. திருவனந்தபுரம் மகாராசா அவர்களின் இராசாங்க வைத்தியர் டக்றர் ஜேவாரிங் எஸ்கோயர்அவர்களின் அனுபவ முறைப்படி இரண்டைமுதல் நான்கு கிறெயின் சூரணம்வரை நெய், தேன், ஏதாவது தக்கலேகியத்துள் வைத்துக் கொடுத்து அந்தச்சூரணத்தையும் புண்ணிலிட்டுவந்தால் சில வாரங்களில் குணம்உண்டாகும்எனக் கூறுகின்றார். இவ்விதமாகவே சூரணித்துக் குஷ்டப்புண்களில் தூவிவந்தபொழுது அதனால் நற்சுகம் உண்டாவதைக் காந்தியடிகளும் கண்டு தமது "ஆரோக்கிய மொழி" என்றநூலிற் கூறியுள்ளார். மேல்நாட்டவர்களும் இதனை விசேடமாகவே கூறியிருக்கின்றார்கள்.

வல்லாரைஇலையை நெய்யில்வெதுப்பி எடுத்து இஞ்சி, உப்பு, பூண்டு, எலுமிச்சம்புளி சேர்த்து அரைத்து உணவுடன் சேர்த்துக்கொண்டால் சீரணசக்தியை உண்டாக்கும். இது நீர்வசதியுள்ள இடங்களில் அதிகமாகக் காணக்கூடியதாகும். இது வட்டமான இலைகளை உடையது. மக்கள் இதன் நற்குணத்தைஅறிந்து இதனைப்பச்சடி செய்து சாப்பிட்டு வந்துள்ளார்கள். இது இரத்தவிருத்தியை உண்டாக்கும். அதனால் ஒவ்வொருவரும் தமது வீட்டில் இதனைஉண்டுபண்ணித் தமது உணவுக்கு வேண்டியபடி எடுத்துக் கொள்ளலாம்.

—டக்றர்
இ. ஆ. வே. சச்சிதானந்த தாசன்

---

## சோவியற் ருஷியாவிலே சமயத்தின் மறுமலர்ச்சி

"35 வருடகாலம் இடையறுத சமயவிரோதப்பிரசாரத்துக்கும், நாஸ்திகத்துக்கும் பின்னர் சோவியற்ருஷியாவில் சமயமானது மறுமலர்ச்சியின் பிரபையைக் கண்டறியக்கூடியதாயிருப்பது ஆச்சரியந் தருவதாகின்றது" என்று லெபனன்நாட்டின் பிரபல எழுத்தாளரான திரு. மிச்செல் சிஹா அவர்கள் பெய்ரூத்நகரில்பிரசுரமாகும் "லெஜூர்" என்ற பத்திரிகையில் எழுதியிருக்கின்றார்.

மேலும்அவர் எடுத்துக்கூறியிருப்பது வருமாறு: "பாலர்வகுப்பு, ஆரம்ப பாடசாலைகள்முதல் நாஸ்திகத்தாலே போஷிக்கப்பட்ட ருஷியஇளைஞர்கள் புதியதோர் மாறுட்டத்தை வெளிக்காட்டுகின்றார்கள். நித்தியமும், ஆதியந்தமின்மையும் மாறுட்டத்தைஉண்டுபண்ணி அவர்களை வருத்துகின்றன; கடவுளை மறக்கவும், அவமதிப்பாக அவரை நகையாடவும் கற்பிக்கப்பட்டுவருகையில் தங்கள் இருதயங்களின் உணர்ச்சிகொண்டு அவர்கள் கடவுளை அறிந்துகொண்டார்கள்.

"உண்மையையும், நித்தியத்தையும் கண்டறிவதற்கெனச் சுபாவமும் மறைமுகமுமான ஓர்மனவாஞ்சை மனிதனிலே இருக்கின்றது. அவனது சிந்தனைகளிலே சீவியத்தினதும், மரணத்தினதும் அடிப்படையான தத்துவங்கள் சுபாவமாகவேஎழுகின்றன. சிருட்டிகரை எதிர்த்து இந்தப்போராட்டத்தைக் கம்யூனிஸம் ஏன்நடத்தவேண்டும்?

"ஓர்பொய்யென்றும், மாயையென்றும் சமயத்தை ஓர்திட்டப்படி தள்ளிவைப்பதிலே ஆக்கிரமிப்புக்கொள்கையையுடைய கம்யூனிஸம் மனிதவர்க்கத்துக்கு முக்கியபிரச்சினைஒன்றை உண்டுபண்ணியிருக்கின்றது. சமயம்என்பது முக்கியமற்றதாய் — வருங்காலத்தைக் கொண்டிராததாய் இருந்தால் கம்யூனிஸம் இந்தமாதிரியாக ஏன் அதை எதிர்த்துப் போராடவேண்டும்?

"எவரையுமே மனமடியச் செய்யாது கடவுளினும், ருஷிய தலைவர் மெலன்கோவினும் மக்கள் நம்பிக்கை கொள்ளக் கூடியவர்களாகவேண்டும். ஆனால், சோவியற்ஆட்சி எந்தவிதமான ஓர்நல்லுடன்பாட்டுக்கும் வர மறுக்கின்றது. இவ்விதமாக அது இரு எசமான்களுக்கு ஊழியஞ்செய்யமாட்டாது. தெய்வீகத்துக்கும், மனுஷீகத்துக்குமிடையே —காள்மாக்ஸுக்கும், நித்தியவாழ்வுக்குமிடையே ஓர்தெரிவு செய்யப்படவேண்டும்."

---

### நன்றியறிந்த தோத்திரம்

சதாசகாயமாதாவின் இரக்கத்தினாலும், அர்ச். தீத்தம்மாளின் மன்றாட்டாலும் எங்கள்மகனுக்கு நீடியகாலமாகவுற்பட்டிருந்த வலி, மயக்கம்முதலியன குணமானதற்காகவும், பலதின்பங்களிடையே நாங்கள்கேட்டுக்கொண்ட நன்மையான காரியம் நிறைவேறியதற்காகவும் பிள்ளைகள், எல்லோரும் பரீட்சையில்தேறியதற்காகவும், எங்களுக்கு ஏற்பட்டவியாதி சுகப்பட்டுவருவதற்காகவும் நன்றியறிதல் கூறி நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறோம்.

எங்கள் மகனுக்குஏற்பட்டிருக்கும் பிடிவாதகுணமும், வியாதியும் முற்றாய்க் குணப்படும்படி தாயே! இரக்கமாய்க்கிருபைசெய்தருளும்.

மாதாவின் அடியார்
கொழும்பு.

---

### அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

அப்புத்தளை: எஸ். எம். யோசேப் 10-00 — கொழும்பு: அந்தோனியாப்பிள்ளை 1-00, மிசெஸ் ஏ. அந்தோனிப்பிள்ளை 3-00—மட்டக்களப்பு: எஸ். எல். பாக்கியநாதர் 1-00—கேகாலை: ஏ. யூஜின் 5-00—வறியப்போலா: டி. ஜி. டேவிற் 2-00 — பண்டாரவளை: ஜே. அந்தோனியம்மாள் 1-00, சூசைமரிபீற்றர் 1-50—டன்கொற்றுவா: வி. ஞானப்பிரகாசம் 34-00—கொற்றகல: எஸ். தோமஸ் 2-00 உடப்புசலாவை: எம். அந்தோனிப்பிள்ளை 10-50, ஏ. எஸ். பீற்றர் 10-50 — நம்பொடை: மிஸ் பாக்கியம் 1-00—டிம்போடுரு: பி. எஸ். சூசைப்பிள்ளை 1-00 — நுவரேலியா: யோசேப் மாற்கு டானியல் 7-00 — அக்கரபற்றன: எல். ஏ. எஸ். தோமஸ் 2-00 — கல்கமுவா: ஆர். எம். எஸ். அந்தோனிப்பிள்ளை 5-00, எம். எஸ். அந்தோனிப்பிள்ளை 1-00, எம். எஸ். கிறகோரிஸ் 1-00, ஜே. லூக்கேஸ்பிள்ளை 2-50, வி. சந்தியாப்பிள்ளை 1-00, எஸ். செபஸ்தியாம்பிள்ளை 1-00, எஸ். மரியாம்பிள்ளை 3-00, கே. திரேசம்மா -50, எம். பிரான்சீஸ் 1-00, ஏ. மரியாம்பிள்ளை -50, வி. அந்தோனிப்பிள்ளை 2-00—குருநகல்: ஜி. எஸ். சின்னத்துரை 1-00 — பாஷையூர்: ஹூப்பர் லேனு 1-00 — வவுனியா: பி. சந்தியாப்பிள்ளை 2-00, பி. ஜே. சிறில் 1-00 — முள்ளிக்குளம்: சந்தியா வரோணிக்கா 1-00, ஏ. பி. இஞ்ஞாசியா கூஞ்ஞு 1-00, எஸ். ஞானம்மா குருஸ் -50, எம். அந்தோனி லேனு 1-00, கே. வலத்திசார் கூஞ்ஞு 2-00, எஸ். லூக்காஸ் லம்பேட் 1-00 — நாவற்காடு: எஸ். செலஸ்தீன்பிள்ளை 14-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00—செட்டிகுளம்: ஜே. சின்னப்பு 5-00, வி. சவிரிமுத்து 10-00, ரி. பஸ்ரியாம்பிள்ளை 5-00 — கரவெட்டி: எஸ். பஸ்ரியாம்பிள்ளை 1-00, பி. கபிரிகேற்பிள்ளை 1-00—சூராவத்தை: பி. ஏ. இராசரத்தினம் 6-00—கஞத்துறை: எஸ். யேசுதாசன் 3-00—மிருசுவில்: ஏ. எஸ். ரி. 2-50 — யாழ்ப்பாணம்: எஸ். லூயிஸ் 1-00, ஏ. பிரான்சிஸ்பிள்ளை 4-00 — நேரியகுளம்: வி. எஸ். அந்தோனிப்பிள்ளை 2-00—மருதங்குளம்: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 3-00 — கல்லில்லா: ஏ. எல். சைமன் 5-50—மன்னார்: எம். பிலோமினம்மா 1-00—சில்லாலை: எம். ஜே. மரியநாயகம் 1-00—வட்டவளை: ரி. அந்தோனி குருஸ் 2-00—வேப்பங்குளம்: கே. சின்னப்பு 2-00, ரி. பி. கிளாறம்மா 1-00, எஸ். மாற்கு 1-00 — அவிசாவலை: மைக்கேல் மஸ்கறின் 9-00.

The Director,
St. Joseph's
Conference.
Bishop's House,
JAFFNA.

சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர்
மேற்றிராசன மாளிகை
யாழ்ப்பாணம்.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

சதாசகாயமாதாவின் விசேஷ அருளினாலும், அர்ச். அந்தோனியாருடைய மன்றாட்டினாலும் எஸ். எஸ். சி. வகுப்பில் திறமையாகச் சித்தியடைந்தேன். இவர்களின் இரக்கத்தினால் சீக்கிரமாக உத்தியோகமும் கிடைத்தது. இன்னும் எங்கள்குடும்பத்துக்கு வேண்டிய நன்மைகள் யாவும் சதாசகாய மாதாவின் இரக்கத்தின்வழியாய்க் கிடைக்கும்படி அவளை விசேஷ விதமாக வேண்டிக்கொள்ளுகிறேன். அவளின் நாமம் மேன்மேலும் புகழப்படுவதாக.

ஊர்காவற்றுறை S. R. R.

---

## JAFFNA MUNICIPAL COUNCIL

### Supplementary Budget No. 2 of 1954

NOTICE is hereby given in terms of Section 214 (2) (b) of the Municipal Councils Ordinance No. 29 of 1947 that Supplementary Budget No. 2 of the Jaffna Municipal Council for the year 1954 will be open to public inspection at the Municipal Office for seven days from 1st October, 1954.

S. A. Sabapathy,
Mayor,
Jaffna Municipal Council.

Municipal Office,
Jaffna, 27th September, 1954.

## WANTED

Wanted house on rent Jaffna Town preferably near Convent or College—rent not to exceed Rupees 50/- per mensem. Apply B. C. Navaretnam, Bank of Ceylon, Foreign Department, Colombo.

---

● சோவியற் அரசின் ஆதிக்கத்திலுள்ள கிழக்குஜேர்மனியிலிருந்து இவ்வாண்டின் முதல்ஆறுமாதங்களிலும் 55.800 ஜேர்மனியர்கள் மேற்குஜேர்மனிக்கும், மற்றும் சுதந்திரநாடுகளுக்கும் தப்பியோடியிருப்பதாக அறிக்கை வெளியாயிருக்கிறது. இவர்களில் 1,462பேர் மக்கள் பொலிசர்களாவர்.

● பரிசுத்தபாப்பரசர் மரியாயின் சபைகளில் சேர்ந்துகொண்ட அறுபதாம்வருட ஞாபகார்த்தமாக அவர் பெற்றுக்கொண்ட அன்பளிப்புகளிலே, அவரது மரியாயின்வருடகருத்துகளுக்காக அச்சபைகளைச் சேர்ந்த 80,000 அங்கத்தவர்களது செபங்களின் ஞானப்பூச்செண்டை அடக்கிய கலசமும் ஒன்றாகும். இம்மாதம் 8-ந் திகதியன்று இது அவருக்குச் சமர்ப்பிக்கப்படலாயிற்று.

---

### நன்றித்துதி

சகாய அன்னையின் கிருபையினால், எனது ஆத்துமத்தில் பலகாலமாய்இருந்த கலக்கம்நீங்கி ஆத்துமசுத்தமும், சமாதானமும் உண்டானது. நேர்த்தியின்படிபிரசுரிக்கிறேன்.

A. R. N.

---

### விளம்பர விகிதம்

| | ரூ. ச. |
|---|---|
| நன்றியறிந்தஸ்தோத்திரம் ... | 2 00 |
| மரணஞாபகம் ஒரு அங். ... | 2 00 |
| ஓடர் நிசி ( Order Nisi ) இரண்டுமுறைக்கு ... | 10 00 |

மற்றும் விளம்பரங்களுக்குக் கடித மூலமாகவோ, அன்றேல் நேரிலோ மனுப்பண்ணிக்கொள்ளவும்.

* * *

### ஞானோபதேசக் கோர்வை

ஞானோபதேசக் கோர்வை 3 பாகங்களும் தற்போதுஎம்மிடம் விற்பனைக்கிருக்கின்றன. தேவையானோர் மேல்வரும்விலாசத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

* * *

### இலங்கும் மகிமைமுடி

என்னும்
12-ம் பத்திநாத பாப்பரசரது
மரியாயின் புனிதவருடப்
பொது நிருபம்

டசின் :— 3-50 தபாற் செலவு 35
ஒன்று :— 35 „ 04

மனேஜர்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 30-1954.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org